# வவனியாவில் குளங்கள் நிரம்பி வழிகின்றன


★ ★
Registered as a Newspaper in Ceylon    விலை சதம் 10

ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி    National Tamil Daily
மலர் 8    10 11-66.    இதழ் 271
றஜப் 26 ஐப்பசி 25    வியாழக்கிழமை


## பல குடும்பங்கள் அவதி; நெல்வயல்கள் சேதம்

வவனியா, புதன்

நேற்றிரவு முதல் வவனியாப் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கடும்மழை காரணமாக வவனியா மாவட்டத்தில் பல குளங்களில் நீர் நிரம்பி வழிகிறது. வவனியாக்குளம், மாமடுவக் குளம், மாரம்பைக்குளம் ஆகியவை நிரம்பி வழிகின்றன.

வவனியாக் குளத்துக்கு அருகே குடியிருந்த சுமார் ஐம்பது குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளன அவர்களுக்கு உணவு, உடை வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன அவர்களின் வீடுகள் வெள்ளத்தால் அழிந்து விட்டதாகத் தெரிகிறது.

நெல் வயல்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் இம்முறை பயிர்ச் செய்கை பாதிக்கப் படுமென்றும், இதனால் ஒரு லட்சம் ரூபா வரை நஷ்டம் ஏற்படுமென்றும் அஞ்சப் படுகிறது.

## ஹெயின் தளபதியானர்

கொழும்பு, புதன்

இலங்கை இராணுவத்தளபதியாக மேஜர் ஜெனரல் ஹெய்ன் நியமிக்கப்பட்டுள்ளார். மேஜர் ஜெனரல் உடுகம பதவி நீக்கப்பட்டபின் தற்காலிகத் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த பிரிகேடியர் ஹெயின் மேஜர் ஜெனரலாக உயர்த்தப்பட்டு தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# மன்னாரை நோக்கி புயல் விரைகிறது

## வடக்கு கிழக்கில் காற்றும் மழையும்

### பயிர்கள் சேதம்: போக்குவரத்து ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், வியாழன்

**முல்லைத்தீவு வழியாக இலங்கைக்குள் நுழைந்த புயல்காற்று மாலையில் மன்னாரை நோக்கி விரைந்துகொண்டிருந்தது.**

யாழ்ப்பாணம், வவனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் மாலை தொடக்கம் பலத்த மழை பெய்துகொண்டிருப்பதுடன் நேற்றுப் பிற்பகல் தொடக்கம் கடும் காற்றும் வீசிக்கொண்டிருக்கிறது. 1964-ம் ஆண்டின் இறுதியில் வீசிய கோரப் புயலால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்கள் கடும் காற்றையும பலத்த மழையையும் கண்டு அச்சமடைந்துள்ளனர்.

இந்த மாவட்டங்களில் குளங்கள் பல பெருக்கெடுத்துள்ளன வயல்களில் வெள்ளம் நிறைந்து பயிர்கள் அழிந்துள்ளன. மரங்கள் பல வீழ்ந்துவிட்டன

திருக்கோணமலையில் பல பகுதிகளில் தொடர்ந்து மழைபெய்கிறது. பல இடங்களில் வயல்கள் முற்றாக நீரில் மூழ்கிவிட்டன. மரங்கள் வேரோடு சாய்ந்துவிட்டன.

பிரதான வீதிகளில் வெள்ளம் காணப்படுகிறது.

மன்னார், முல்லைத்தீவுப்பகுதிகளிலும் மழை தொடர்ந்து செய்கிறது. வாழை, பலா, முருங்கை மரங்கள் முறிந்து விழுந்துவிட்டன. தாழ்ந்த பிரதேசங்களில் உள்ள குடிசைகள் நீரில்மூழ்கிவிட்டன.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்தில் எல்லாப்பகுதிகளிலும், நேற்றுக் காலை முதல் தொடர்ந்து மழைபெய்து கொண்டிருக்கிறது. நேற்று நண்பகல் தொடக்கம் காற்று பலமாக வீசுகிறது பல மரங்கள் வேரோடு சாய்ந்துவிட்டன. சிறு குடிசைகள் வீழ்ந்துவிட்டன.

காற்றினாலும், மழையினாலும் பல பகுதிகளின் போக்குவரத்துச் சேவைகள் துண்டிக்கப் பட்டுள்ளன. நெடுந்தீவுக் கடல் கொந்தளிப்பினால் இப்பகுதிப் போக்குவரத்துச் சேவை நேற்று மாலை தொடக்கம் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுவழியாக..

நேற்று பிற்பகல் முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த கடும் புயல் காற்று பின்னேரத்தில் மன்னார் பிரதேசம் நோக்கி போய்க் கொண்டிருந்தது. மணிக்கு 15 மைல் வேகத்தில் அது வீசிக்கொண்டிருப்பதாக கொழும்பு அவதான நிலையம் அறிவித்தது.

வடக்கு, வடமேற்கு, கிழக்கு பிரதேசங்களை இந்தக் காற்றுப் பாதித்திருக்கின்றது. திருக்கோணமலையில் கடும் மழைபெய்திருந்த போதிலும் புயற்காற்று திருகோணமலையைப் பாதிக்கவில்லை.

இலங்கைக்குள் புயல் முல்லைத் தீவின் வழியாகவே பிரவேசித்ததாகவும் இப்புயல் 1964-ம் ஆண்டு டிசம்பரில் வீசிய புயலுக்கு சமமானது என்றும் அவதான நிலையம் கருதுகின்றது.

கப்பல் சேவைகள்யாவும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. மட்டக்களப்பு அவதான நிலையத்துக்கும் கொழும்புக்கும் உள்ள தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

## தனுஷ்கோடியில் புயல் அபாயம்

சென்னை, நவ. 9

அடுத்த இருபத்திநான்கு மணி நேரத்தில் தனுஷ்கோடியில் பாம்பன்பாலம் பகுதியிலும் நாகபட்டினத்திலும் கடுமையான புயல் வீசலாமென்று இன்று பகல் எச்சரிக்கை செய்யப்பட்டது.

நாகபட்டினத்தில் வீசும் புயலினாலும் அதனைத் தொடர்ந்து பெய்யும் பலத்த மழையினாலும் கரையோரப்பகுதிகளிலுள்ள தாழ்வான இடங்கள் கடுமையாகப் பாதிக்கப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் தொழிலுக்கு கடலில்செல்ல வேண்டாமென்று எச்சரிக்கைசெய்யப்பட்டுள்ளனர்.

## நந்தா ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்படவில்லை

புதுடில்லி, நவ. 9

இந்திய உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா ராஜினாமாச் செய்தது குறித்து லோகசபையில் அங்கத்தவர்கள் பலர் கேள்விகள் கேட்டனர்.

திரு. குல்ஸாரிலால் நந்தாவின் ராஜினாமா இன்னும் ராஷ்டிரபதியினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்றும் அவர் தொடர்ந்து மந்திரியாகவிருக்கிறார் என்றும் சபையில் பதிலளிக்கப்பட்டது.

ராஜினாமா பற்றிபிரதமரே முடிவுசெய்வாரென்றும் மத்திய மந்திரிசபையில் ஏற்படும் மாறுதல்கள் குறித்து அவர்கள்தான் இறுதி முடிவு செய்வார் என்றும் சபையில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே மத்தியமந்திரிசபையில் சில மாற்றங்கள் ஏற்படலாமென்று இங்கு கருதப்படுகிறது. இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வை. பி. சவான் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவசரமாக அழைத்திருப்பதால் அவரே உள்துறை மந்திரியாக நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை மத்திய மந்திரி சபையில் மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை.

பார்லிமெண்டில் அதிசயம

## சிங்கள எம்.பி. தமிழில் கொணர்ந்த மசோதா

கொழும்பு, புதன்

சிங்களம் மட்டும் சட்டத்தின் தீவிர ஆதரவாளரான ஹபராதுவ எம்.பி. திரு. பிரின்ஸ் குணசேகரா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் தமிழில் பேசினார். அதுமட்டுமல்ல, தனிப்பட்ட அங்கத்தவர் தினமான இன்று தனிப்பட்ட அங்கத்தவர் என்ற முறையில் இருமசோதாக்களையும் கொண்டுவந்தார். இவற்றில் ஒருமசோதாவை அவர் தமிழில் சமர்ப்பித்து தமிழ் மொழியிலும் பேசினார்.

திரு. பிரின்ஸ் குணசேகரா தமிழில மசோதாவைக் கொண்டுவந்து தமிழிலேயே பேசியதற்கு உடுப்பிட்டி எம்.பி. திரு எம். சிவசிதம்பரம், சிங்களத்தில் நன்றி தெரிவித்தார்.

நீதிமன்றங்களில் வழக்குப் பேசுவதற்கு இலவச சட்ட உதவி வழங்க வசதியளிக்கும் மசோதா ஒன்றையும் சட்டக்கல்லூரியில் இலவச சட்டக்கல்வி அளிக்கும் மசோதா...

(5-ம்பக்கம் பார்க்க)

## மந்திரி தஹநாயக்கா இன்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், வியா

உள்நாட்டமைச்சர் டபிள்யூ. தகநாயக்கா, வடக்குக்கு இன்றுகாலை உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இருதினங்களும் அவர் பல சேவை நிலையங்களைதிறந்து வைப்பார்.

இன்றுகாலை 8-30 மணிக்கு பலாலி விமான நிலையத்தை மந்திரி வந்தடைவார். யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா, வடபகுதி எம்.பி.க்கள், காரியாதிகாரிகள், அங்கு மந்திரியை வரவேற்பார்கள்.

காலை 10 மணிக்கு அரியாலையில் மின்சக்தி தொகுதி நிலையத்தை மந்திரிதிறந்துவைப்பார். காலை 11-45 மணிக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

டிராக்டர் சாரதி

புதிய போட் டிராக்டர் ஒன்றுக்கு அனுபவமும் கம்பீரமுள்ள சாரதி உடனே தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். அசோகா என்ஜினியரிங் கோர்ப்பரேஷன், உயிலங்குளம், மன்னார் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 1486

வான் சேல்ஸ்மென்

யாழ்ப்பாணம், நாட்டுப் புறங்களில் சரக்குகளை விற்பனைசெய்ய வான் சேல்ஸ்மென்கள் தேவை. ரொக்கப்பிணை ரூபா 3000/-கட்ட வேண்டும். சம்பளம் ரூபா 150/- ம், அலவன்சும் கொடுக்கப்படும். விளம்பர இல: 1485, ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1485

## விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்!

கோழிக்குஞ்சுகள் இனம் பார்த்து வாங்குவோர்க்கு ஓர் நற்செய்தி. சேவல்கள் கொடுக்கப்படும். விலைப்பட்டியல் எழுதுங்கள் அனுப்பப்படும். விலைப்பட்டியல் பதிவுசெய்து ஒருமாசத்துக்குள் குஞ்சுகள் அனுப்பப்படும். அருணா ஏஜென்சீஸ். அளவெட்டி. 1466

## அஸதி அடக்கம்

காலஞ்சென்ற பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு. விஞ்ஞானசிங்கம் (கிங்ஸி துரைசிங்கத்தின் அஸ்திகள் வட்டுக்கோட்டை, சதீட்றல் சேர்ச்சில் அடக்கம் செய்வதற்கு இம்மாதம் 12-ம்திகதி சனிக்கிழமை பிற்பகல் எடுத்துச் செல்லப்படும். தேவாலயத்தில் பிற்பகல் 4 மணிக்கு வழிபாட்டின்பின் அடக்க கிரியை நடக்கும். 1487

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, ரேந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# குதிரை மார்க் வாளிகள்



குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?

இன்றே வாங்குங்கள்

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினால் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெனிஸ் முறைப்படி விசேஷமாகத் தயாரிக்கப்படுவன. உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும்.

குதிரை மார்க் • HORSE BRAND •

தயாரிப்பாளர்கள்:

தலைமைக்காரியாலயம்: எல்பிஹெம் ஹவுஸ், கொழும்பு.

தொழிற்சாலை: எல்பிஹெம் ஹவுஸ், மாவிட்டபுரம்.

வடமாகாண விநியோகஸ்தர்கள்: தனலக்ஷ்மி ஸ்ரோஸ், தெல்லிப்பழை.

கையிருப்பாளர்கள்:

1. மஸ்கன்ஸ லிமிட்டெட், கொழும்பு - 12
2. என்: வைத்திலிங்கம் அன் கோ, 3-ம் குறுக்குத்தெரு, கொழும்பு.

# செய்திச் சுருக்கம்

## பலத்த மழை

தென் மாகாணத்தில் பல பகுதிகளிலும் மீண்டும் பலத்த மழை பெய்வதால் ஆறுகள் நிரம்பி வழியத் தொடங்கியுள்ளன.

## சி. பி. டி. மணிலா செல்வார்

நீர்ப்பாசன அமைச்சரும், உதவி அமைச்சரும் இம்மாதம் 18 ந்திகதி மணிலா செல்ல இருக்கிறார்கள். நவீன டிராக்டர்கள் விவசாயத் தேவைக்கு எவ்வாறு உபயோகப் படுத்தப் படுகின்றன என்பதை நேரில் கண்டறிய மேஸ்டன் எக்ஸ்ரா டிராக்டர் கம்பனி அழைப்பை ஏற்றுச்செல்கிறார்கள்.

## காதலனுடன் சென்றார்

மனைவி தனது காதலனுடன் செல்வதற்கு கம்பளையைச்சேர்ந்த ஒரு வாலிபர் அனுமதியளித்துள்ளார். தனது மனைவி என்ஜினியருடன் காதலாய் இருப்பதை நேரடியாகக் கண்ட இவ்வாலிபன் கம்பளை பொலிஸ் நிலையத்திற்கு அவர்களைக் கொண்டு வந்தார். மனைவி காதலனுடன் செல்ல விருப்பம் தெரிவித்ததும் அவருடைய உடுப்புகள் எல்லாவற்றையும் மனைவியிடம் அக்கணவர் ஒப்படைத்தார்.

## விவசாயப் பண்ணை

கெக்கிராவை தென் கலகமாவட்ட விவசாயக் கமிட்டி மீவனவயில் 83 ஏக்கரில் அரசாங்க விவசாயப்பண்ணை அமைக்க ஒழுங்கு செய்துள்ளது.

## 8,700 லொறிகள் இறக்குமதியாகும

அடுத்த 5 ஆண்டுகளில் 8,700லொறிகளை இலங்கை இறக்குமதி செய்ய இருக்கிறது.

**மகாத்மா தியேட்டர்**
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி நடித்த
**திருவிளையாடல்**
பிரதமரின் யாழ்ப்பாண விஜயமும் காண்பிக்கப்படும

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி நடித்த
**எங்கவீட்டுப்பிள்ளை**

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். -- சரோஜாதேவி நடித்த
**எங்கவீட்டுப்பிள்ளை**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ரஞ்சன்—வசுந்தராதேவி நடித்த
**மங்கம்மா சபதம்**
(புதிய கொப்பி)

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Elizabeth Taylor
Richard Burton
in
**SANDPIPER**
(Adults)

# விளம்பரம்

## காங்கேசன்துறை பட்டின சங்கம் கேள்விப் பத்திர விளம்பரம் 1967

மேற்படி காங்கேசன்துறை பட்டின சங்கத்திற்குச் சொந்தமான, காங்கேசன் துறைப் பொதுசனச் சந்தைக்குள் இருக்கும் 1-ம், 2-ம் இலக்கமுடைய மாட்டு இறைச்சிக் கடைகள் கேள்விப்பத்திரங்கள் மூலம் 1967-ம் ஆண்டிற்கு குத்தகையாகக் கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் சபையினால் அதற்கென வழங்கப்படும் நகல் பத்திரங்களில் நிரப்பப் பெற்று, இணைப்பிரதிகளாக அனுப்பப்படுதல் வேண்டும்.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் யாவும் 21-11-66-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாகச் சபை அலுவலகத்தில் ரூபா 25/- பிணைப்பணமாகச்செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும், 1966-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 22-ம் திகதி 12 மணிக்கு முன்னதாகச், சீல் வைத்த காகிதக் கோவையின் இடது பக்கத்தில் 'மாட்டு இறைச்சிக் கடை கேள்விப்பத்திரம்' என எழுதப்பெற்று தலைவர், பட்டின சபை, காங்கேசன் துறை என்ற விலாசத்திற்கு விலாசமிடப்பட்டு சபையில் வைக்கப்பட்டிருக்கும் விண்ணப்பப் பெட்டியிலோ, அன்றேல் பதிவுத் தபால் மூலமாகவோ சபை அலுவலகத்தில் சேரும்வண்ணம் அனுப்பப்படல் வேண்டும்.

எந்த ஒரு விண்ணப்பத்தினையோ, அன்றேல் எல்லா விண்ணப்பங்களையுமோ எக்காரணமின்றி நிராகரிக்கவோ அன்றேல் ஏற்றுக்கொள்ளவோ சபைக்கு உரிமையுண்டு.

மேற்கொண்டு விபரங்கள் தேவைப்படின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் வந்து அறிந்துகொள்ளலாம்.

ஆ. வ. சதாசிவம்
தலைவர்,
காங்கேசன்துறை,
பட்டின சங்கம்.

பட்டின சபை
அலுவலகம்,
காங்கேசன்துறை,
7-11-1966 1371

## யாழ்ப்பாண மாநகரசபை ஆதன விற்பனவு

வீடுவளவுகளிலிருந்து வருமதியானசோலைவரி நிலுவைகள் சம்பந்தமாக 1947ம் ஆண்டின் 39ம் இலக்கமாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (தலைப்பு252)252ம் பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட விருந்துக் கட்டளையின் பிரகாரம்கைப்பற்றப்பட்ட அசைவுள்ளஆதனங்கள் யாவும், 21-11-66ம் திகதி திங்கட்கிழமை மு. ப. 10 மணிக்கு மாநகரசபைக் களஞ்சியத்தில் பகிரங்கஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என்பதுபற்றி இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வீட்டிலக்கம், காலம், கைப்பற்றப்பட்ட பொருட்கள் சம்பந்தமானமுழு விபரங்களையும் 27-10-66ம் திகதிய அரசாங்கவர்த்தமானி—பகுதி4ல் பார்க்கவும்.

கட்சன் செல்வராசா,
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
8-10-66. 1370

## தீபாவளித் திரை விருந்து

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) |
| மொடேர்ண் (பண்டாரவளை) | மொடேர்ண் (பதுளை) | விஜிதா (ஹட்டன்) |



**சிவாஜி கணேசன் தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி, நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
# ஆண்டவன் கட்டளை
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொடீஷியா விவகாரம்:

# பிரிட்டிஷ் - ஸ்மித் பேச்சுக்களுக்கு ஆபிரிக்க தலைவர்கள் கண்டனம்

## பலாத்காரம் பிரயோகிக்குமாறு கோரிக்கை

அடிஸ்அபாபா, நவ. 9

ரொடீஷியா விவகாரம் சம்பந்தமாக "சட்ட விரோதப் பிரதமர்" திரு. அயன் ஸமித்துடன் பிரிட்டிஷ் அரசாங்கம் இப்பொழுது நடத்தி வரும் பேச்சுக்களை ஆபிரிக்கத் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

"வெறும் பேச்சுக்களை நடத்தினால் மட்டும் போதாது. பலாத்கார மூலமாகுதல் சட்ட விரோத ஆட்சியைக் கலைக்க வேண்டும்" என்று இவர்கள் கோரியுள்ளனர்.

இங்கு நடைபெற்று வரும் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபன உச்சி மகாநாட்டில் கலந்து கொண்டுள்ள ஆபிரிக்கத் தலைவர்கள் நேற்று நடைபெற்ற இரகசிய கூட்டமொன்றுக்குப் பின்னர் நிறைவேறிய தீர்மானத்தில், ரொடீஷியாவில் சட்டவிரோதமான ஸ்மித் ஆட்சியை முறியடிக்க பிரிட்டன் பலாத்காரம் உள்ளிட்டு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளது.

ஐ. நா. வின் தீர்மானங்களுக்கமைய ரொடீஷியாவில் பிரிட்டன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ரொடீஷியாவில் பிரிட்டன் எந்த விதமான மாற்றங்களைச் செய்தாலும் அங்கு பெரும்பான்மையான மக்களின் ஆட்சி நிறுவப்படும் வரை ரொடீஷியாவை எந்த ஆபிரிக்க நாடும் அங்கீகரிக்கக் கூடாது" என்றும் இத்தலைவர்கள் தீர்மானித் திருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்று நடைபெற்ற இரகசியக் கூட்டத்திலும் பொதுக் கூட்டத்திலும் ரொடீஷியா விவாதம் காரசாரமான முறையில் நடைபெற்றதென்றும் சில தலைவர்கள் உணர்ச்சி ததும்ப பிரிட்டன் மீது கண்டனம் பொழிந்தனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 'விசாரணை வேண்டும்'

புதுடில்லி, நவ. 9

டில்லியில் நடைபெற்ற பசுவதைஎதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது பொலிசார் நடந்து கொண்ட விதம்குறித்து நீதிவிசாரணை நடைபெறவேண்டுமென்று அகில இந்திய ஜனசங்க தலைவர் இந்திய அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

## 12 தொகுதிகளில் போட்டி

சென்னை, நவ. 9

1987 பொதுத்தேர்தலில் தமிழ்நாட்டில் 12 தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் போட்டியிடும் என்றும் தாராபுரம், மாயவரம், சிதம்பரம் ஆகிய 3 டில்லி சட்ட சபைகளிலும் அபேட்சகர்களை நிறுத்தும் என்றும் சம்மேளனத் தலைவர் முத்துசாமி தெரிவித்துள்ளார்.

# பிரதமர் துங்குவுக்கு ஆங்கில திருக்குறள்

கோலாலம்பூர், நவ. 9

மலாயாப்பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானுக்கு திருக்குறள் புத்தகமொன்று தமிழ் நாட்டைச் சேர்ந்த திருவாசகமணி" திரு. கே. எம். பாலசுப்பிரமணியத்தால் பரிசாக வழங்கப்பட்டது.

சமயச் சொற்பொழிவாற்ற மலாயா சென்றிருந்த திருவாசகமணி மலாயாப் பிரதமரைச் சந்தித்து 20 நிமிடங்கள் பேசினார். அப்பொழுது அவர் தன்னால் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்ட திருக்குறளை வழங்கிய போது பிரதமர் துங்குமகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார்.

புத்தகத்தை அன்பளிப்புச் செய்த திரு. பாலசுப்பிரமணியம் இது என்னால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இந் நூலை உங்களுக்கு அளிப்பதில் பெருமையடைகிறேன். இது உலகப் பொது நூல்" என்று கூறினார்.



ஸ்ரீதர்

சென்னை, நவம்பர். 9

டைரக்டர் ஸ்ரீதர்- தேவசேனு தம்பதிகளுக்கு சென்னையிலுள்ள கல்யாணி ஆஸ்பத்திரியில் ஆண் குழந்தை பிறந்துள்ளது. முன்பு 'ஸ்ரீப்பிரியா' என்ற பெண் குழந்தை இருக்கிறது.

# கம்போடியஎல்லையில் கடுஞ்சமர்

## 750 வியட்காங்கியர் மாண்டனர்

சைகோன், நவ. 9

கம்போடியா எல்லைக்கருகே அமெரிக்க துருப்புகளுக்கும் வியட்காங்கியருக்கு மிடையே நடைபெற்றுவரும் கடும் சண்டையில் கடந்த ஐந்து தினங்களில் மட்டும் 750 வியட்காங்கியர் கொல்லப்பட்டதாக இங்கு அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கடும் சண்டையில் மூன்று அமெரிக்க கம்பெனிகளுக்கும் (படைகள், கணிசமான சேதம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே வடக்கு வியட்னாமில் அமெரிக்க விமானங்கள் இராணுவ இலக்குகள்மீது குண்டு மாரி பொழிந்திருக்கின்றன.

# கினி அதிபரின் வெளியேற்ற உத்தரவு

கொனாக்ரி, நவ. 9

கினியிலுள்ள அமெரிக்க சமாதானப் படையினர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்றுகினி அதிபர் செகுட்டுரே உத்தரவிட்டுள்ளார்.

இம்மாதத்துக்குள் அவர்கள் வெளியேற வேண்டுமென்று தமது உத்தரவில் கினி அதிபர் கோரியுள்ளார்.

கானு தலைநகர் ஆக்ராவில் கினிபிரதிநிதிகள் பத்தொன்பதுபேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்ததும் இதற்குப் பதில் நடவடிக்கையாக கினியிலுள்ள அமெரிக்க தூதர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்ததும்வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

கானுவின் நடவடிக்கை குறித்து கினி அதிபர் அமெரிக்காமீது குற்றம் சுமத்தியிருந்தார்.

## நடிகர்களுக்கு கோரிக்கை

சென்னை, நவ. 9

சென்னையில் வீசியபுயலால் பாதிக்கப்பட்ட 25ஆயிரம் மக்களுக்கு நடிகர்களை உதவி செய்யும்படி மேயர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்டோர் நகரசபைப் பள்ளிக்கூடங்களில் தங்கியிருக்கிறார்கள்.

## தாய்லந்து அரிசி அனுப்பாது

பாங்கொக், நவ. 9

உள்ளூர்ச்சந்தையில் அரிசி விலைகள் உறுதியாக்கப்படும் வரை, வெளிநாடுகளுக்கு அரிசி அனுப்புவதில்லையென்று தாய்லாந்து மந்திரிசபை தீர்மானித்துள்ளது. உள்ளூர்ச் சந்தையில் நிலவும் உயர்ந்த அரிசி விலைகளைப்பற்றி மந்திரி சபை ஆராய்ந்த பின்னரே இம்முடிவு எடுக்கப்பட்டது. (பி. டி. ஸி )

## புயல் சேதம்

சென்னை, நவ. 9

தமிழ்நாட்டில் கடந்த வாரம் வீசிய புயலால் ஏற்பட்ட வீடுகளையும் வீதிகளையும் பழுதுபார்க்க ரூ 2 கோடி தேவைப்படும் என்று தமிழ்நாட்டு அரசாங்க அதிகாரி தெரிவித்துள்ளார். செங்கல்பட்டு, வடஆற்காடு மாவட்டங்களில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது.

## நூல்நிலையமஇல்லை

புதுக்குடியிருப்பு, புதன்

புதுக்குடியிருப்பில் நூல் நிலையம், விளையாட்டு மைதானம் ஆகியவை இல்லாதது இப்பகுதி மக்களுக்குபெருங் குறையாக இருக்கிறது.

## மேயர் தெரிவு 29 ல்

சென்னை, நவ. 9

சென்னையின் புதிய மேயர் தேர்தல் இம்மாதம் 29ந் திகதி மாலை நடைபெற இருக்கிறது. சென்னை மேயராகப் பதவி வகித்த மைனர் மோசஸ் பதவிக்காலம் முடிந்து விட்டது. சென்னை நகரசபையில் 278 வருடம் வன்னியர் எவரும் மேயராகஇருக்காததால் வன்னியர் ஒருவர் மேயராகத்தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆறுமுகம், சம்பந்தம் என்றஇருவர் பெயர் அடிபடுகிறது.

## தபால்விநியோகத்தில் தாமதம்

பண்டத்தரிப்பு, புதன்

யாழ்ப்பாணத்திலிருந்து தபால் வந்துசேருவதற்கு மூன்று மணித்தியாலங்கள் எடுப்பதாகப் புகார் செய்யப்படுகிறது. தாமதிந்துத் தபால் கிடைப்பதால் கடிதங்களும் தாமதமாகவே விநியோகிக்கப்படுகிறது. பண்டத்தரிப்பு, மாதகல் தபால் ஊழியருக்கும் இந்நிலையே ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## (படுக்) கைவிரித்தாள!

லண்டன், நவ. 9

கணவன் தன்னுடன் 'அன்பு' கொள்வதைத் தடுக்க மனைவி படுக்கையில் இருவருக்குமிடையே படுக்கை விரிப்பொன்றினைப் போட்டிருந்தாளாம். இக்காரணத்துக்காக லண்டன் நீதவான் ஒருவர், திரு. ஜேம்ஸ் ஜான்மார்ஸ் என்பவருக்கு விவாகரத்து வழங்கினார்.

(பி. டி. ஸி.)

# இத்தாலி கண்ட பெருவெள்ளம்

## மாண்டவர் தொகை 200 ஆக அதிகரிப்பு

ரோம், நவ. 9

வடக்கு இத்தாலியில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 200 பேர் மாண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தாலிச் சரித்திரம் இதுவரை காணாத இந்த வெள்ளப் பெருக்கினால் பல லட்சம் மதிப்புள்ள பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான வீடுகள் அழிந்துவிட்டன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு இத்தாலியை இப்பொழுது கடல் கொந்தளிப்பு எதிர்நோக்கியுள்ள போதிலும் நிலைமையைச் சமாளிக்கத் தடுப்பு வேலைகள் ஜரூராக நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தி. மு. க. உதவி

சென்னை, நவ. 9

தி. மு. கழகம் 1000 ரூபாவை சென்னையில் புயலால்பாதிக்கப் பட்டவர்களுக்குவழங்கியுள்ளது.

இத்தொகையை மேயர் மைனர் மோசஸிடம் தி.மு. கழகத்தலைவர் மு. கருணாநிதி கையளித்துள்ளார்.

## 'டயர்' தொழிற்சாலை

களனி, புதன்

களனியிலுள்ள டயர் உற்பத்தித் தொழிற்சாலை அடுத்த வருடம் தனது உற்பத்தி தொடங்கும்.

வருடந்தோறும் இத் தொழிற்சாலை 65,000 டயர்களையும், 1,80,000'டியூம்பு' களையும் உற்பத்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இளவாலைக்கு மின்சாரம்

பண்டத்தரிப்பு, புதன்

அடுத்த வருடத்தில் சுன்னாகத்திலிருந்து இளவாலைப் பகுதிக்கு மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. மின்சாரம் பெறவிரும்புபவர்கள் முற்பணமாய் ரூபா 60 செலுத்தவேண்டுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## இப்படியும் நடக்கிறதாம்

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலை அரசினர் வைத்தியசாலையில் இப்படியும் நடைபெறுகிறதாம். காயம், புண் என்பவற்றுக்குமருந்து கட்டும்படி டாக்டர் பத்திரத்தில் எழுதிக்கொடுத்தால் மருந்துகொடுப்பவர் வீட்டில் கொண்டுபோய் மருந்தைக் கட்டும்படி மருந்தையே நோயாளிகளிடம் கொடுக்கிறாராம்.

## பஸ் சாரதிக்கு அபராதம்

காணந்துறை, புதன்

ஹொரணை பஸ் டிப்போவைச் சேர்ந்த இ. போ. ச. சாரதி பி. டி. அமரசேன என்பவர் கவலையீனமாக பஸ்ஸை செலுத்தி, பாடசாலைச் சிறுவன் ஒருவனுக்கு காயம்விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு பாணந்துறைமாஜிஸ்திரேட் 100 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

## தபலட்டைக்கு தட்டுப்பாடு

சுழிபுரம், புதன்

சுழிபுரம் தபாற்கந்தோரில் தபாலட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த நான்கு தினங்களாக தினமும் ஆயிரத்துக்குமேற்பட்ட தபாலட்டைகள் இப்பகுதி தபாற் கந்தோர்களில்விற்பனையாகியுள்ளன.

## நெசவாலைகள்

பண்டத்தரிப்பு, புதன்

மாதகல் சென்தோமஸ் நெசவுநிலையம், இளவாலை சென். ஜேம்ஸ் நெசவுநிலையம், முள்ளானை நெசவு நிலையம் ஆகியவற்றின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இவை அரசாங்க உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு 11-11-66 வெள்ளிக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் 12-11-66 சனிக்கிழமை மட்டும் ''ஈழநாடு'' வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

பிறர்க்கு நல்லதையே செய் அன்பு, தயை வாய்மை, அஹிம்சை, மனத்தூய்மை ஆகிய வற்றை வாழ்க்கையிற் கடைப்பிடி. இதுதான் மதம். —சுவாமி சிவானந்த சரஸ்வதி

ஈழநாடு

EELANADU National Tamil Daily: Est. 1959 @ JAFFNA
Telegrams : EELANADU Jaffna: Telephone : 189

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஐப்பசி மீ 25 உ (10-11 66)

## விளுப்பத்திரங்கள்

ஸ்தல ஸ்தாபன சேவைக்கமிஷன், பரீட்சை விஞ்ஞாபனங்களிலும் விண்ணப்படிவங்களிலும் இந்த நாட்டின் உத்தியோக மொழியான சிங்களத்தைப் புறக்கணித்துவிட்டு தமிழுக்கும் ஆங்கிலத்துக்குமே இடமளித்திருப்பதாக ஒரு விஞ்ஞாபனின் புகைப்படப் பிரதியுடன் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரியொன்று செய்தி வெளியிட்டிருந்தது. இச்செய்தி தவறானதென்றும் சிங்களமொழிமூலம் ஸ்தல ஸ்தாபன சேவைப் பரீட்சை எடுப்பவர்களுக்கென சிங்கள விஞ்ஞாபனங்களும் தமிழ் ஆங்கில மொழிமூலம் பரீட்சை எடுப்பவர்களுக்கென தமிழ், ஆங்கில விஞ்ஞாபனங்களும் பிரசுரிக்கப்பட்டதாகவும் ஸ்தலஸ்தாபன அமைச்சு உடனடியாகவிளக்கம் தெரிவித்துள்ளது.

சிங்களம் இந்நாட்டின் உத்தியோக மொழியானாலும் வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாக மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழ் மொழியில் அரசாங்கத்துடன் தொடர்புகொள்வதற்கும் தமிழ் மொழிச் சட்ட விசேஷ விதிகள் வசதியளிக்கின்றன. என்னதான் சட்டங்கள் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டபோதிலும் நடைமுறையில், அவை சரியாக அமுலாகும்வரை சில கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்யும். தமிழ்மொழிச் சட்ட விசேஷ விதிகள் நிறைவேற்றப்பட்ட பின்னரும் இந்நாட்டில்வாழும் தமிழ் பேசும் மக்கள் பலவித கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். இதுபற்றிபார்லிமெண்டுக்குள்ளேயும் வெளியேயும் பலதடவைகள் பலரும் எடுத்துக் கூறியிருக்கின்றனர். இலங்கை ஒரு ஜனநாயக நாடு. ஜனநாயக நாட்டில் பெரும்பான்மைச் சமூகத்தினர் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அவர்கள் கையில்தான் ஆட்சி உரிமையும் இருக்கும். சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டிய பொறுப்பும் அவர்களையே சார்ந்திருக்கிறது. இதை உணர்ந்தும்கூடப் பெரும்பான்மைச் சமூகத் தலைவர்கள் குறுகிய சிந்தனைப்போக்கைக் கொண்டு, பெரும்பான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தே தீருவோம் என 'சங்கற்பம்' செய்வதும் அவர்களுக்குத் தூண்டுகோலாகச் சில பத்திரிகைகள் நடந்துகொள்வதும் நாட்டின் அமைதியையும் முன்னேற்றத்தையும் விரும்பும் மக்களுக்கு வேதனையும் ஏமாற்றமும் அளிப்பதாகும். சிறுபான்மையினரின் வகுப்புவாதத்தைப் பெரும்பான்மையினரின் வகுப்புவாதம் பேராபத்தானது என்று மறைந்த மேதை நேரு கூறியதை நினைவூட்டி தேசிய ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் செயல்களுக்கு இடமளிக்கக்கூடாதென்பதையும் இத்தகைய விஷமத்தனங்கள் எந்தச் சமூகத்துக்கும் நன்மையாக மாட்டாவென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## கடும் நடவடிக்கை தேவை

பேராதனைப் பல்கலைக் கழகத்தில், புதிதாகச் சேர்ந்த மாணவிகளைத் தொந்தரவு செய்யும் 'ராகிங்' இன்னும் குறைவின்றி நடைபெற்றுவருகிறதாம். துகிலுரிதல் போன்ற மிக மோசமான செயல்களுக்கும் புதிய மாணவிகள் உள்ளாகின்றனராம். புதிய மாணவிகளுக்குத் தொந்தரவு கொடுத்ததற்காகப் பதினொரு மாணவிகள் தற்காலிகமாகச் சில வாரங்களுக்கு வெளியேற்றப்பட்டிருப்பினும் நிலைமை திருந்தவில்லை. இந்த 'ராகிங்' தொல்லையை ஒழித்துக் கட்டப்போவதாக கல்வி அமைச்சர் சூளுரைத்தும் பயன் ஏற்படவில்லை.

எங்கிருந்தோ, எப்படியோ நமது பல்கலைக்கழகங்களில் புகுந்துவிட்ட இந்த மோசமான வழக்கம் ஒழிக்கப்படவேண்டுமென்று எல்லோரும் நயம்பட எடுத்துக் கூறியும் அது ஒழிக்கப்படவில்லை. வரவர மோசமாகிக்கொண்டே வருகிறது. கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டாலொழிய இந்தப் பழக்கம் நீங்கமாட்டாது போல் தோன்றுகிறது.

ஒழுங்கற்றமுறையில்நடந்துகொள்பவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவதற்கு இப்போதுள்ள குற்றத்தடுப்புச்சட்டத்தில் இடமுண்டு. பல்கலைக்கழகத்தில் மாணவிகள் துகிலுரியப்படுவதோ மற்றும் செயல்களோ ஒழுங்கான செயல்களென்று கூறமுடியாது. ஒப்புக்கொள்ளவும் முடியாது. எனவே 'ராகிங்' என்ற பெயரில் ஒழுங்கீனமான, காடைத்தனமான செயல்களில் ஈடுபடுபவர்கள்மீது பொலிசார் வழக்குத் தொடரவேண்டும். இது இந்த 'ராகிங்' தொல்லையைஒழித்துக்கட்ட உதவுவதாக இருக்கலாம்.

### நாட்டிலும் நகரிலும்

# யமனும் சாகிறான்

நாலைவரும் தீபாவளி நரகாசுர தத்துவத்தை நன்கு விளக்கிக் காட்டிக்கொண்டு வருகிறது. இருள் தலைவனாகிய அவனுடைய பிடியில் உலகமெல்லாம்எப்படி அந்தகாரம்சூழ்ந்து அநீதியும் அக்கிரமமும் கோர தாண்டவம் ஆடியதோ, அதுபோலவே அடைமழையும் இடி புயலும் சேர்ந்து சூரிய ஒளியை மறைத்து மக்களுக்கு சொல்லொணாத் துயரம் விளைக்கிறது, கடல் குமுறுகிறது, மக்கள்கொந்தளிக்கிறார்கள், அரசவை இடிந்து இடுக்கிறது, எதிர்பாராத இடங்களில் எல்லாம் வெள்ளமும் சேதமும், சாவும் எதிர்பாராதவர்களுக் கெல்லாம் வெட்டும் குத்தும்.

இவையெல்லாம் தீமைத் தெய்வத்தின் அட்டகாசங்கள், நரகாசுரனின் ஆர்ப்பாட்டங்கள். யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று நாட்களாக இடைவிடாத ஓயாத மழை. விட்டுப்பிரிய மனமில்லாத காதலன் போல அடிக்கடி நினைந்து நினைந்து வருணன் வான் மழைபெய்கிறான். ஒரு வாரத்துக்கு முன்பு வங்காள விரிகுடாவில் தோன்றிய சூறாவளிக்காற்றும் புயலும் சென்னையில் நாலைந்து பெரியகப்பல்களை உடைத்து தெறிந்து, 54 பேரின் உயிரைக் கொள்ளைகொண்டு 2 கோடி ரூபாய்க்கு நாசம் விளைத்தன. நேற்று திருக்கோணமலைக்கு 200மைல் தூரத்தில் வங்காள விரிகுடாவில் மறுபடியும் ஒரு புயல் தோன்றியுள்ளது.

தீபாவளிப் பண்டிகையுடன் நரகாசுரன் ஒழிந்தது போல வெள்ளிக்கிழமைகழிந்தால்தான் இந்தப்பீடைகளும் ஒழியும்போலத் தெரிகிறது.

சுதந்திரதினம், காந்திஜயந்தி இரண்டையும் தவிர அகில இந்தியாவிலும் கொண்டாடப்படும் தினம் தீபாவளி ஒன்றுதான். ஆனால் அங்கே ராஜ்யத்துக்கு ராஜ்யம் கொண்டாட்ட வைபவங்கள் வித்தியாசப்படும் வட இந்தியாவில் வர்ணப்பொடிகளை நீரில் கலந்து ஆண்களும் பெண்களும் ஒருவர் மீதொருவர் அடிப்பார்கள். மைசூரில் பனையளவு உயரமான பாவைகள் தெருவீதிகளில் வலம் வரும். தமிழ்நாட்டில் பட்டாசுகளும் வாணங்களும் கொளுத்துவார்கள். ஈழத்தில் இந்த கைங்கரியத்தைதைப்பொங்கலுக்கு மாற்றி விட்டோம். இது எப்படி மாறியதென்று யாருக்காவது தெரியுமா?

வாணம் கொளுத்துவது வெறும் வேடிக்கைக்குத்தானா? மழை காலத்தில் நுளம்புகள்(கொசுக்கள்) அதிகம்; வாணப்புகை அவற்றைக் கலைத்துவிடும். அதற்காகத்தான்வாணம்கொளுத்துகிறார்களென்று ஒரு தென்னிந்திய நண்பர் சிரிக்காமல் சொன்னார். சரிதானா?

இலங்கையில், முக்கியமாக யாழ்ப்பாணத்தில், நரகாசுரவதத்தை சிலர் மிகத் தீவிரமாகக் கொண்டாடவேண்டுமென்று நினைப்பதுண்டு. இந்தக்கேளிக்கை வெறியர்களுக்கு கடைசி வெள்ளிக்கிழமையும் தீபாவளியன்று வந்துவிட்டது 'சிவபூசைக்குள் கரடி வந்தது போலிருக்கும்'. ஆனால் பெரும்பாலார் தீபாவளிகள் எல்லாம் கடைசி வெள்ளிக்கிழமையில் வரப்படாதா என்று ஏங்குவார்கள்.

இந்த தீபாவளியன்று நரகாசுரனுடன் சேர்ந்து யமனும் சாகப்போகிறான்! கடைசி வெள்ளிக்கிழமை நல்லூரில் யமசங்கார உற்சவம் நிகழும். யாழ்ப்பாணத்தில் நிகழும் மிக அலங்காரமான திருவிழாக்களில் இதுவுமொன்று.

—வழிப்போக்கன்.

# பிரச்னைகள் தீர வழி என்ன?

(க. வயிரவநாதர்)

தமிழர் சமுதாயத்திடையே பல பிரச்னைகள் எழுந்துள்ளன. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்கள ஆசிரியர்களை ஏற்பது, முஸ்லிம்மக்கள் சிங்களம் கற்பது போதனாமொழி போன்ற பல அரசியல் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டியது தமிழ் அரசியற் தலைவர்கள் கடமையும் உரிமையுமாகும். இப் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதில் கருத்து வேறுபாடுகளிருப்பினும், இவற்றிற்கெல்லாம் அடிப்படையாகத் தீர்த்துவைக்கப்படவேண்டிய ஒரே பொது பிரச்னையில் எவருக்கும் கருத்துவேறுபாடோ, இடர்ப்பாடோ இடையாது. அன்றியும் இதைத் தீர்த்துவைப்பின், மற்றப் பிரச்னைகள் மிக சுலபமாகத் தாமே தீரும். இதுதான் மொழிப் பிரச்னை

இப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு, சிங்களம் இந் நாட்டின் தேசியமொழி என்பதையும், தமிழ் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உத்தியோகமொழியும் ஏனைய மாகாணங்களில் பொதுமக்கள் அரசாங்கத்தோடு தொடர்புகொள்ளக் கூடிய மொழி என்பதையும், இரண்டு தனிப்பட்ட மசோதாக்கள் மூலம் இலங்கைப் பாராளுமன்றம் ஏற்றிருக்கின்றது. இந்த உண்மையை எந்த அரசியற் கட்சியைச் சேர்ந்தவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. எனவே, இப்போதுள்ள பிரச்னை, சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு மொழிகள் பற்றிய விதிகளை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருவதேயாகும். இதில் தாமதமேன்? இதை அமுல்செய்வதற்கு எந்தப் பிரச்னையும் குறுக்கிடவேண்டியதில்லை. யாருக்கும் காத்திருக்கவேண்டியதுமில்லை. ஆகத் தேவையானது நேர்மையும்விருப்பமுமேயாகும். [illegible] இன்றைய நம்பிக்கை பாராளுமன்றத் தமிழ்உறுப்பினர்கள் தேசியஅரசாங்கத்துடன் ஒத்துழைக்கிறார்கள். இந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக, தேசிய அரசாங்கம், தான் ஏற்றுக்கொண்ட மொழிச்சட்டங்களை உடனடியாக அமுல் செய்யவேண்டும். பாராளுமன்றத் தமிழ் உறுப்பினர்கள் அமுல்செய்விக்கவேண்டும்.

மொழிச்சட்டங்களை அமுல்செய்வதானால், அதைப் பொறுப்பேற்கும் அரசாங்க ஊழியர் யாவரும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சிபெற்றிருக்கவேண்டும். ஆனால், அண்மையில் வெளியான 701-ம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தில் அரசாங்க ஊழியருக்குச் சிங்கள அறிவு மாத்திரமே தேவையென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதனால் தேசியஅரசாங்கத்தின் மொழிக்கொள்கையிற் சந்தேகம் ஏற்பட இடமுண்டு. இலங்கையில் தமிழ் மொழி விசேடவிதிகள் அமுல்நடத்தப்படுமானால், அதற்குத் தமிழ் மொழி அறிவு எந்த அரசாங்க ஊழியருக்கும் தேவை என்பதை எவரும் மறுக்கமுடியாது. எனவே, அரசாங்க ஊழியனாகச் சேரும் ஒரு தமிழன் சிங்கள அறிவுபெறவேண்டியது எங்ஙனம் இன்றியமையாததோ அதேபோலத் தமிழரல்லாத எவருக்கும் தமிழறிவு இருந்தாலன்றி தமிழ் மொழி மூலம் அரசகருமத்தைச் செய்யமுடியாது, குறிப்பிட்ட திறைச்சேரிச் சுற்றறிக்கை சிங்களவர், தமிழரைப் பிரித்து அரசகருமங்களையாற்ற வழிவகுக்கிறதேயல்லாமல், தேசியஅரசாங்கத்தின் தேசிய ஒற்றுமைக் கொள்கையையும், பாராளுமன்றமேற்றுக்கொண்ட சிங்களம், தமிழ் மொழிகள் பற்றிய விதிகளையும் நடைமுறைக்குக்கொண்டுவருவதாக இல்லை.

இந்நிலையில் மொழி பற்றிய திறைசேரிச் சுற்றுநிருபத்தை நீக்கிவிடுமாறு சில தமிழர் ஆர்ப்பாட்டம்செய்கிறார்கள். இது முற்றிலும் தவறானது. சிங்களச் சகோதரர்களின் மனத்தைப் புண்படுத்துவதுமாகும். தமிழரெவரும் சிங்களம் தேசிய மொழியாகவிருப்பதை மறுக்கவில்லை. எனவே, இந்தச் சுற்றறிக்கையில் சிங்களஅறிவு தேவையென்றிருப்பதை எந்தத் தமிழனும் ஆட்சேபிக்கமுடியாது. ஆனால் தமிழ்மொழி விசேட விதிகளை அமுல்செய்வதற்குத் தமிழறிவும் எல்லா அரசாங்க ஊழியருக்கும் தேவையென்பதை இந்தச் சுற்றுநிருபம் குறிப்பிடத் தவறிவிட்டது. இதையும் இந்தச் சுற்றுநிருபத்தில் சேர்த்துக்கொள்ளும் வகையில், இது மாற்றியமைக்கப்படவேண்டுமென்பதே தமிழரின் உரிமைக்குரலாக அமையவேண்டும். இந்தக் கோரிக்கையைத் தேசிய அரசாங்கம் ஏற்று குறிப்பிட்ட திறைசேரி சுற்றுநிருபத்தைஉடனடியாகதிருத்தி அமைக்கவேண்டும் இதற்கான முயற்சியில் பாராளுமன்றத் தமிழ்உறுப்பினர் உடனடியாக ஈடுபட்டுத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த முயற்சியில் இவர்கள் வெற்றிபெறமுடியாவிடின், வீணே காலத்தை விரயஞ்செய்து, தேசியஅரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதால் தமிழினம் ஏமாந்துபோகுமேயன்றித் தங்கள் உரிமைகளைப் பெறமாட்டார்கள்.

அரசாங்க ஊழியருக்குச் சிங்களம், தமிழாகிய இருமொழிகளிலும் தேர்ச்சி இருக்கவேண்டுமென்று பகிரங்கசேவைவிதிகள் அமையுமானால் சிங்கள ஆசிரியர்களையோ, தமிழாசிரியர்களையோ இலங்கையில் எந்தப்பகுதிக்கனுப்பினாலும் எவரும் ஆட்சேபிக்க வேண்டியிருக்காது. தாய்மொழி மூலமே கல்வி போதிக்கவேண்டுமென்ற கொள்கைக்கு ஆட்சேபனையுமிருக்காது. முஸ்லிம், தமிழர் மொழிப்பிரச்னையும் தீரும். ஆகவே அடிப்படைப் பிரச்னையான மொழிப் பிரச்னையைத் தீர்த்துத் தமிழ்மொழி விசேட விதிகளை உண்மையிலேயே நடைமுறைக்குக் கொண்டுவரத் தமிழ்த் தலைவர்கள் நேர்மையாக முயலவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்லிமெண்டில்

# 'தேர்தல் செலவுகள் விரிவாக சமர்ப்பிக்க சட்டம் வேண்டும்'

கொழும்பு, புதன்

தேர்தல் சட்டங்களின் திருத்தமொன்றாக ஓர் தேர்வுச் சபை நியமிப்பதுபற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது பொதுவாக எல்லா அங்கத்தவர்களும் இப்படியானசபை நியமிப்பதன் அத்தியாவசியத்தை வலியுறுத்தினர்.

தேர்தல் திருத்தங்கள் பற்றி விவாதிக்கப்பட்ட போது அண்மையில் நடைபெற்ற இடைத் தேர்தலில் இடம்பெற்ற சம்பவங்களையும் அங்கத்தவர்கள் குறிப்பிடத் தவறவில்லை.

அங்கத்தவர்கள் சட்டமாக தேர்தல் செலவுகள் பற்றிய விபரமான அறிக்கை சமர்ப்பிக்கவேண்டிய சட்டத்தின் அவசியம்பற்றி சுதந்திரக்கட்சி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனா குறிப்பிட்டு தேர்தல் சட்டத்தின் திருத்தங்களின் தேவை பற்றி எடுத்துக்கூறினர்.

நிக்கவரெட்டியா எம். பி. திரு. எம். தென்னக்கோன் பேசுகையில் முன்னுள் ஆட்சியில் இருந்த அரசாங்கம் செய்த இலவற்றைச் சுட்டிக்காட்டி தேசிய அரசாங்கமும் அவ்விஷயங்களை மேற்கொள்வது தவறாகுமென்றும் முன்னர் பாராளுமன்ற தேர்தல் ஒருசிலருக்கே உரிமையாயிருந்ததென்றும் தற்பொழுது வறியவர்களும் அரசியலில் பங்குபற்றக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது நல்ல அறிகுறியென்றும் குறிப்பிட்டார்.

தேர்தலில் வெற்றிபெற்ற அங்கத்தவர்கள் தோல்வி அடைந்த அங்கத்தவர் தேர்தலின்போது செய்த குற்றங்கள் சம்பந்தமாக வழக்குத் தொடர புதிய திருத்தத்தில் இடமளிக்கவேண்டுமென சமூகசேவை உதவி மந்திரி திரு. எம். எம். முஸ்தபா அபிப்பிராயம் தெரிவித்தார்.

திருமதி பண்டாரநாயகா பேசுகையில் குறிப்பிட்டதாவது:— அரசாங்க ஊழியர்களின் மனைவிமார் அரசியலில் ஈடுபடமுடியாதென தேர்தல் சட்டம் கூறுகின்றது. ஆனால் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் பொதுசேவை கமிஷனின் அங்கத்தவர்களிலொருவரான திரு. எம். செனிவரத்தினாவின் மனைவி ஒரு விமான நடைமுறையில் தேர்தல் விவகாரங்களில் பங்குபற்றினர்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## துணி விநியோகம்

வர்த்தகமந்திரியின் துணிக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்துக்களால் கொண்டாடப்படும் முதல் தீபாவளி இதுவேயாகும். தனியார்துறையைக் கட்டுப்படுத்தி துணிவிநியோகத்திற்கு கூ. மொ. வி. ஏகபோக உரிமைகொண்டு பொதுமக்கள் துணிபெறுவதற்கு கஸ்டத்தை ஏற்படுத்தியுள்ளது தற்போதைய திட்டம் என்பதை எவரும் மறுக்கமாட்டார்.

இந்த முறையின்பிரகாரம் சில பணவசதியுள்ள துணி வியாபாரிகள் கூ. மொ. வி. ஸ்தாபனமிடமிருந்து துணிகளைக் கொள்வனவு செய்து மொத்தமாக விற்பனை செய்வதற்கு உரிமை பெற்றுள்ளனர். ஆனுல் இந்த வியாபாரிகள் மொத்தமாக விற்பனை செய்வதற்கு அனுமதி பெற்ற பொழுதிலும் அனேகமாக சில்லறைக்கே விற்றுவருகின்றனர். இதனுல் இவர்களிடமிருந்து துணிகளை கொள்வனவுசெய்யும் சிறிய துணி வியாபாரிகள் மேலும் கஸ்டத்திற்குள்ளாகியுள்ளனர். இதற்குமேலாக கூப்பனில்லாது துணிகளைப் பெறுவதற்கு ரூபா 1-25 சதம் கொடுத்து வாங்கலாமென அரசாங்கம் பொதுமக்களுக்கு சலுகைகள் அளித்துள்ளதாக அறிவித்துள்ளது. உண்மையில் இதனுல் பொது மக்கள்மேலும் கஸ்டமடைந்துள்ளனர். இச்சீர்கேடுகள் விரைவில் நீக்கப்படுமா? களைப் போன்றவர்களுக்கு கட்டுமா?

இந்த கோளாறுகள் எல்லாவற்றிற்கும் மூலகாரணம் எங்கள் கூட்டுறவு மொத்த விற்பனை சமாஜம் தான் என்று கூறுகிருர்கள். எதற்கு எடுத்தாலும் இந்த ஸ்தாபனத்தின் மீது பழி போடுகிறுமேயன்றி இதற்கு பரிகாரம் கிடையாது போலிருக்கிறது. அரசாங்கத்தார் இதுபற்றி கொஞ்சம் சிரமமெடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

சி பொன்னுத்துரை.
பூவரசங்குளம்,
வவுனியா.

'சில்லறை வியாபாரி'
யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

## மல்லி தட்டுப்பாடு

சர்க்கரை தட்டுப்பாடு, புளி தட்டுப்பாடு- இப்பொழுது மல்லித்தட்டுப்பாடும் வந்து விட்டது. எங்கள் ஊர் கூப்பன் கடையில் ஒரு கூப்பனுக்கு ஒரு அவுன்ஸ் மல்லி தான் கொடுக்கிருர்கள். இது குடிநீர் போடவும் காணுது. பதினுலு கூப்பன் கொடுத்தால் தான் ஒரு ரூத்தல் மல்லி பெறலாம். அதுவும் கொடுப்பார்களோ என்பது சந்தேகமாயிருக்கிறது.

தனிப்பட்ட கடைகளில் மல்லி இருக்கிறதாம். ஆனுல் விலையோ ரூத்தல் ஒன்றரை ரூபாய்க்கு கிட்டலாம். என்

## எதிரி விடுதலை

திருநெல்வேலி, புதன்

பண மோசடி சம்பந்தமாக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. என். எம். ஜே. ராஜேந்திரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட ஒரு வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ் வழக்கில் மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மனேஜரான பஸ்தியாம்பிள்ளை வெலிஜோப்பிள்ளை அச்சங்கத்திலிருந்து 14,000 ரூபா பணத்தை நம்பிக்கை மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் வி. என். நவரத்தினமும், அரசாங்க தரப்பில் வழக்கறிஞர் தர்மலிங்கமும் ஆஜராகியிருந்தார்கள். மூன்று நாட்களாக நடைபெற்ற விசாரணையின் பின்னர் நீதிபதி எதிரியான வெலிஜோப்பிள்ளையைச் சுற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்தார்.

## தையல் கடையில் திருட்டு

பூநகரி, புதன்

பூநகரி வாடியடியில் கு. வெள்ளைச்சாமி என்பவருக்குச் சொந்தமான தையல் கடையில் நேற்று முன்தினமிரவு திருட்டுப்போய்விட்டதாக கிராமசேவையாளரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடையின் பின்புறத்தினை உடைத்து திருட்டு நடைபெற்றுள்ளதாம்.

## மஜிஸ்ட்ரேட்டின் கொலை வழக்கு

மாவிட்டபுரம், புதன்

பெரியவிளான் மாஜி பொலிஸ் கான்ஸ்டபிள் கொலை வழக்கு தொடர்ந்து மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சுன்னுகத்தில் உள்ள ஒரு கராஜின் சொந்தக்காரர் இன்னையா சின்னராசா சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த மாஜி பொலிஸ் கான்ஸ்டபிள் சுப்பிரமணியம் சிவகுருநாதன் என்பவரை கூடு இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை தர்மலிங்கம் என்னும் கார்ச் சாரதி கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. தி. நவரத்தினத்தின் அனுசரணையுடனும் திரு. கே. வி. எஸ். சண்முகநாதனின் உதவியுடனும் திரு. ஏ. அமிர்தலிங்கம் ஆஜராளுர். சங்கானைப் பொலிசாரின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. எஸ் நடராசா வழக்கை நடத்தினுர்.

பலர் சாட்சியமளித்தபின் நீதிபதி மேல் விசாரணையை இம்மாதம் 21-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## மாங்காயைத் திருடியவர்

மாவிட்டபுரம், புதன்

"ஐம்பத்தைந்து சதம் பெறுமதியான மாங்காயை தள்ளிரவில் களவாடச் சென்ற நீ இப்போது 'திருடன்' என்ற பெயர் எடுத்ததுடன் பத்துரூபாய் கோர்ட் செலவும் 250ரூபா பிணையில் கட்டி ஒருவருட காலத்திற்கு நன்னடத்தைப் பிணையில் இருக்கவும் வேண்டி வந்துவிட்டது" என்று மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ், நிற்சிங்கா மாங்காய் திருட்டு வழக்கொன்றில் எதிரியைப் பார்த்துக் கூறினுர்

இவ்வழக்கில் உடுவிலைச் சேர்ந்த வல்லிபுரம் தம்பிராசா என்பவர் வி. செல்லத்துரை என்பவரின்தோட்டத்தில் உள்ள 55 சதம் பெறுமதியான மாங்காயைத் திருடியதாக சுன்னுகம் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

## அபராதம்

மாவிட்டபுரம், புதன்

சுன்னுகத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் பெரியதம்பி என்பவர் சட்டவிரோதமாகச் சாராயம் விற்றதாக சுன்னுகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் எழுபத்தைந்து ரூபாய் அபராதம் கட்டும்படியும் அபராதம் கட்டத்தவறினுல் ஆறு வாரம் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் எதிரிக்கு உத்தரவிட்டார்.

## வெள்ளச் சேதம்

உடுவில், புதன்

இருவாரகால இடைவெளிகளுக்குப் பின்னர் பெய்தபலத்த மழை காரணமாக உடுவில், சங்குவேலி கந்தரோடை வயல்களெல்லாம் ஒரே வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது.

## அவசரகாலம் நீடிப்பு

கொழும்பு, புதன்

அவசரகால நிலைமை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது கடந்த ஜனவரி மாதம் 8ந் திகதி [illegible]

# 'லெனின் வாரிசு மா-சே-துங்'

### புரட்சி தினக்கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், வியா

அன்று நடந்துவந்த யுத்தத்தை முடிவுகட்டுவதற்கும் சமாதானத்துக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், ஒடுக்கப்பட்ட பல இன மக்களின் விடுதலைப் புரட்சி ஒன்றே வழி என்பதை நடைமுறையில் எடுத்துக் காட்டியவர் லெனின்.

அக்டோபர்புரட்சி தினக்கூட்டம்நேற்று மாலை யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை தொழிற்சங்க சம்மேளன காரியாலயத்தில் நடைபெற்றபோது, திரு. வீ. ஏ கந்தசாமிபேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. நீர்வை பொன்னையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும்கூறியதாவது;

லெனின் உலகத்தின்மகத்தான புரட்சியாளனும், தத்துவ ஆசானுமாவர். அவர் வழியில் இன்று உலகப் புரட்சிக்குவழி காட்டியாகவும் மார்க்சிச-லெனினிசத்தின் தலைசிறந்த ஆசானுகவும் விளங்குபவர் சீனத்தலைவர் மா சே துங் ஆவர்.

முதலாளித்துவகலாச்சாரத்துவார்த்த ஊடுருவல் சோவியத் நாட்டிலே முதலாளித்துவதனியுடமைச்சக்திகளை வளர்த்துவருகிறது.

திருவாளர்கள் கே. செந்திவேல், வே. கதிர்காமு, கோணரெத்தினம் ஆகியோரும் பேசினர்.

## தாக்கியதாக வழக்கு

திருநெல்வேலி, வியா.

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த நாராயணன் பாஸ்கரனை கத்தியால் குத்தி காயம் விளைவித்ததாக எம். சோமசுந்தரம் மீது யாழ்ப்பாணம் பொலிஸாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. ராஜரட்ணம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் எஸ். இராமநாதன் சாட்சியமளிக்கையில் காயமடைந்த நாராயணன் பாஸ்கரனை தான் வைத்திய சோதனை செய்ததாகவும் அவரது உடலில் ஏழு காயங்கள் இருந்ததாகவும் தெரிவித்தார். வழக்காளி தரப்பில் புரக்டர் ஆர். விசுவநாதனும் எதிரி தரப்பில் புரக்டர் எஸ். கனகரத்தினமும் ஆஜராகியிருந்தார்கள். மேல்விசாரணையை மாஜிஸ்டிரேட் மாசி மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## மாஜிகான்ஸ்டபிள்மீது திருட்டு வழக்கு

மாவிட்டபுரம், புதன்

புன்னுலைக்கட்டுவனைச் சேர்ந்த தம்பிமுத்து சிவரத்தினம் என்பவருக்குச் சொந்தமான சைக்கிள் ஒன்றைச் சென்ற மாதம் 24-ம் திகதி சுன்னுகம் சந்தையில் வைத்து மாஜி பொலிஸ் கான்ஸ்டபிளும் கொக்குவில்சேர்ந்தவருமான பொன்னுச்சாமி துரைச்சாமி என்பவர் திருடியதாகவும், களவுபோனசைக்கிள் என்று தெரிந்தும் அதைச் சென்ற 30ந் திகதி வைத்திருந்ததாகக் கொக்குவில்சைக்கிள் கடைக்காரரான சொக்கலிங்கம். குலசேகரம் மீதும் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிபதி இவ் வழக்கை இம்மாதம் 22ந் திகதிவரை ஒத்திவைத்துள்ளார். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானுர்.

## விவசாய இளைஞர் சங்கம்

உடுவில், புதன்

மானிப்பாய் இந்து விவசாய இளைஞர் சங்கத்தின் பொதுச்சபைக்கூட்டம் தலைவர் எஸ். விஜயநாதன் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்கள் வருமாறு:- போஷகர்: கே. முதலியார் சி. இராசராசா ஜே. பி, தலைவர்: எம். எஸ். விஜயநாதன், காரியதரிசி: ஏ. மதனராஜா, பொருளாளர்: பி. ஜெகநாதன், ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாகக்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## துணிகள் கடத்தினராம்

மாவிட்டபுரம், செவ்

பொலிகண்டியை சேர்ந்த ஆறுமுகம் நடராசா என்பவர் சுமார் 1,000 ரூபா பெறுமதியுள்ளதும், இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டவையென்று நம்பப்படுவதுமான 5 பட்டுச்சேலைகள், 2 பருத்திநூல் சேலைகள் 2 சோடி பட்டு வேட்டி சால்வைகள், ஒரு போர்வை ஆகியவற்றை வைத்திருந்ததாக வல்வெட்டித்துறை பொலிஸார் இவரை கைதுசெய்து கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் வல்வெட்டித்துறை சுங்கக்கலெக்டர் திரு. கே. விக்னேஸ்வரராசா முன்னிலையில் ஆஜர்செய்துள்ளார்கள். விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

## இடமாற்றம்

திருநெல்வேலி, வியா

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் கோர்ட் முதலியாராகக் கடமையாற்றிய திரு. ஸ்ரீபதிராசன் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்துக்கும், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் கோர்ட்முதலியாராகக்கடமையாற்றிய திரு. எஸ். இராஜரத்தினம் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

## சிங்கள..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருரு மசோதாவையும் திரு பிரின்ஸ் குணசேகராசமர்ப்பித்தார்.

ஜனப்பிரதிநிதிகள் சபை சரித்திரத்தில் முதல்தடவையாக தமிழில் ஒரு மசோதாவைக் கொண்டுவந்த பெருமை திரு. பிரின்ஸ்குணசேகராவையே சாருகிறது.

மசோதாக்களைச் சமர்ப்பித்து திரு. குணசேகரா பேசுகையில், சிங்களமும் தமிழுமே இந் நாட்டில் வாழும் இருசமூக மக்களின் தாய்மொழிகளாதலால் ஆங்கிலத்தில் இந்த மசோதாக்களைக் கொண்டுவராமல் தமிழிலும் சிங்களத்திலும் தாம் கொண்டுவந்ததாகக் கூறினுர். நீதிமன்ற மொழிகளாக சிங்களமும் தமிழும் இருக்கவேண்டுமென்றும் அவையே இந்த நாட்டின் தாய்மொழிகளென்றும் அவர் கூறினுர். இந்நாட்டில் சோஷலிஸ வாழ்க்கை முறையில் நாம் முன்னேறுவதற்கு ஒரேவழி சிங்களவர், தமிழர் ஐக்கியமாக வாழ்வதும் அதற்கு சிங்களமும் தமிழும் இங்கு உபயோகிக்கப்படுவதும் தாகுமென்றும் திரு. குணசேகரா சொன்னுர். அவர் சுமார் பத்து நிமிஷங்கள் தமிழில் பேசினுர். பின்னர் சிங்களத்தில் பேசினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவமும் தமிழும் தழைக்க பக்தி ஏற்படவேண்டும்"

நாவலப்பிட்டி, புதன்
"சைவமும் தமிழும் தழைத்தோங்குவதற்கு பக்தி வேண்டும். பற்றுதல் ஏற்பட்டுவிட்டால் அது வளர்ந்துவிடும். தொழிலாளர்கள் தொழிலின்மேல பற்றுதல் கொள்வது வயிற்றுப் பசியைப் போக்குவதற்கு. மனப்பசிநீங்கி மனதில்பக்தி குடிபுக பக்திப்பசி வேண்டும்."

மதுரை ஆதீனம் செஞ்சொற் செம்மணி ஸ்ரீமதி மா. சண்பகவல்லி அம்மையார் வெஸ்ற்ஹோல் தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

சைவ அன்பர்களால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இக் கூட்டத்திற்கு திரு. எம். டி செல்லையா தலைமைவகித்தார்.

மஸ்கேலியா நீர்வீழ்ச்சி திட்டம்

# 1287 தொழிலாளர் வேலை இழப்பர்

## நஷ்டஈடு வழங்குமாறு அரசாங்கத்துக்கு கோரிக்கை

கொஸ்லாந்தை, புதன்
மஸ்கெலியா ஓயா நீர் வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தின் கீழ் 5876 ஏக்கர் நிலப் பரப்புக்கொண்ட 14 தோட்டங்களும் பல தேயிலைத் தொழிற்சாலைகளும் மஸ்கெலியாவும் கங்குவத்தையும் பாதிக்கப்படவிருக்கின்றன.

மேற்கூறப்பட்ட 14 தோட்டங்களைச் சேர்ந்த 1287 தோட்டத்தொழிலாளர்களும் இத்திட்டத்தின் கீழ் வேலையிழப்பார்கள். இவர்கள் வசிக்கும் வீடுகளும் நீரில் மூழ்கவிருக்கின்றன.

இத் தொழிலாளர்களின் எதிர்காலத்தை உத்தேசித்து இவர்களுக்கு நஷ்டஈடு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இ. தொ. கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ் செல்லச்சாமி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கிடையே திரு. தொண்டமான் தயாரித்துக் கொடுத்த திட்டமொன்றை தொழிற்பகுதி ஆணையாளர் ஆராய்ந்துவருவதாகத்தெரிகிறது.

இத்திட்டத்தால் பாதிக்கப்படும் வர்த்தகர்களுக்கு வேறு இடங்களை வழங்குவதில் நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்தை இ. தொ. கா. கேட்டுக்கொண்டுள்ளது. அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படவிருக்கும் 1590 ஏக்கர் தேயிலைத் தோட்டத்துக்கான நஷ்டஈட்டை முதலாளி மார்களுக்கு அரசாங்கம் வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

## பணம் பொருள் ஆராய்ச்சி நிறுவனம்

புன்னாலைக்கட்டுவன், புதன்
இலங்கையில் பணம் பொருள் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றுஏற்படுத்தவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பாராளுமன்றத்தில் இவ் விஷயத்தை எடுத்து விளக்கப்போவதாகவும், சம்பந்தப்பட்ட அமைச்சருடன் இதுபற்றி ஆலோசிப்பதாகவும் அறிவித்துள்ளார்.

## பொலிஸாரின் திடீர் வேட்டை

களனி, புதன்
பேலியகொடை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் எஸ். தங்கராஜா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று கிரிபத்கொடை என்னுமிடத்திலுள்ள மூன்று கடைகளில் நடத்திய திடீர்சோதனையின் விளைவாக ஏராளமான பாக் மாவுடிக்கள் வெளிப்பட்டன.

அக்கடைகளின் சொந்தக்காரர்களான சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## இந்துபரிபாலன சங்கம் தீர்மானம்

பண்டாரவளை, புதன்
பண்டாரவளை இந்து பரிபாலன சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் பண்டாரவளை ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் சங்கமண்டபத்தில் நடைபெற்றது.

தேவார பாராயண வகுப்புகளை நடத்தவும், பண்டாரவளையில் தமிழ் மகாவித்தியாலயம் ஒன்று அமைத்துத் தரும்படி கல்வி மந்திரியைக் கோரவும், தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## போதனை வகுப்பு நடைபெறும்

சங்கானை, புதன்
உருளைக்கிழங்குப் பயிர் செய்கையையிட்டு பேராதனை கிருஷிக பயிற்சிப் பாடசாலையில் விசேஷ பயிற்சி பெற்று சங்கானை கிருஷிக இலாகாவுக்கு மீண்டும் வந்துள்ள திரு. வி. குமாரவேலு வலிகாமம்மேற்கில் உள்ள சகல பயிர்ச்செய்கைக்குழுக்களுக்கும் உருளைக்கிழங்கு அபிவிருத்தியைப் பெருக்கு...

# காலிக் கடிதம்

— நமது நிருபர் —

காலி மாநகரசபை தனது நூற்றாண்டு விழாவை அடுத்தவருட ஆரம்பத்தில் கொண்டாடத் தீர்மானித்துள்ளது. பிரித் ஓதுதல், பிக்குகளுக்கு அன்னதானம் இவற்றுடன் மூன்றுவாரங்களுக்கு ஒரு களியாட்டவிழாவும் இடம்பெறும்.

ஆனால் இந்நூற்றாண்டு விழாவைப்பல அங்கத்தவர்களும், வரியிறுப்பாளர்களும் எதிர்த்துள்ளனர். பொது மக்களின் முக்கிய பிரச்னைகளைத்தீர்த்து வைக்கக் காலி நகரசபைதவறி விட்டதென்பதே இவர்களது முக்கிய குற்றச்சாட்டாகும்.

ஃ ஃ ஃ

காலி மாவட்டத்திலுள்ள சமரச சபைகளுக்குச் செய்யப்படும் நியமனங்கள் பற்றி மக்களிடம் அதிக அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

கட்டலுவ சமரச சபை அங்கத்தவர்கள் நியமனத்தை ஆட்சேபித்து ஹம்பாந்தோட்டை எம்.பி. திரு பிரின்ஸ் குணசேகரா நீதிமந்திரிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

பத்தேகம சமரச சபைத் தலைவர் நியமனத்தை ஆட்சேபிக்கும் தீர்மானம் ஒன்று பத்தேகம கிராமசபையில் ஏகமனதாக நிறைவேறியது.

தொடத்துவ சமரசசபையின் தலைவர் நியமனத்தையிட்டு அதன் அங்கத்தவர் சிலர் இராஜினாமா செய்துள்ளனர்.

ஃ ஃ ஃ

"கல்வியின் நோக்கம் உத்தியோகம்பெறுதவதல்ல ஆனால் கல்வியினால் ஒரு மனிதனின் தராதரத்தைக் கணிக்க முடியும். கல்வித் துறையில் பல்கலைக்கழகம் தான் மிக உயர்ந்த இடமாக இருந்த போதும், அது அதனை நிரூபிக்கவில்லை. இது மாணவர்களின் குற்றமல்ல. கல்வித் திட்டத்தின் தப்பான கொள்கையே இதற்குக்காரணம். கல்விவெள்ளை அறிக்கை ஒன்று பிரமரால் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது அதை எதிர்க்கட்சியினரும் ஆதரிக்கவேண்டும்."

பத்தேகம இறைவிட்சர்ச் மகளிர் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பேசும்போது கல்வி மந்திரி திரு. இரியகொல்லை மேற்கண்டவாறு கூறினார்.

ஃ ஃ ஃ

காலி ரயில் நிலையத்துக்கருகே பாலமொன்றினைத் திறந்துவைத்த உள்நாட்டு விவகாரமந்திரி டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா புதிய ரயில் நிலையத்தை நிர்மாணித்து வரும் தொழிலாளிகளை அவர்களுடைய துரித வேலைகளுக்காகப் பாராட்டினார். இரண்டு வருடங்கள் எடுக்குமென எதிர்பார்க்கப்பட்ட ரயில்நிலையம் குறுகிய காலமான ஒரு வருடத்துக்குள் பூர்த்தியாகும் தறுவாயில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

காலிக்குத்தேசிய அரசாங்கம் நன்மைகள் பலசெய்ய தயாராகவுள்ளதென்றும் புதிய ரயில் நிலையத்தை விட இ.போ.ச. பஸ் நிலையத்துக்கு அத்திவாரக்கல் நாட்டப்பட்டுள்ளதாகவும், கடலோரமாக மரின் டிரைவ், 'மஹா மோதரவில் பாலம்' மீன்பிடித்துறைமுகம் ஆகியனவும்காலிக்கு விரைவில் கிடைக்குமெனவும் டாக்டர் தஹநாயக்கா மேலும் தெரிவித்தார்.

பல்லேகலைத் தோட்டம்

# 1500 தொழிலாளரின் எதிர்காலம்: இ. தொ. கா ஆராய்கிறது

கொஸ்லாந்தை, புதன்
கண்டி பல்லேகலைத்தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத்தை அரசாங்கம் சுவீகரிப்பதால் அங்குள்ள ஆயிரத்து நூறு தொழிலாளர்களின் எதிர்காலம் பற்றி இ.தொ.கா. ஆராய்ந்துவருகிறது.

இத்தோட்டத்தைச் சேர்ந்த 60 தொழிலாளர் பிரதிநிதிகளுடன் தோட்டத்தொழிலாளர்களை எதிர்நோக்கும் பிரச்னைகளை கண்டியில் இ. தொ. க. உதவித்தலைவர் திரு. வி. அண்ணாமலை தலைமையில் கூடி ஆராய்ந்தது.

பல்லேகலை தோட்டத்தை விமானநிலையமாக்கவேண்டுமென்ற யோசனையையும் அரசாங்கம் கொண்டுள்ளது நாட்டின் பல நகரங்களில் விமானநிலையம் இருந்தும் நாட்டின் முக்கிய நகரமான கண்டிக்கு ஒரு விமானநிலையம் இல்லாததுபெருங்குறை என அடிக்கடி பல எம். பி.க்களால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுவருகின்றன. விமானநிலையம் அமைப்பதைவிட இதனை கைத்தொழில் பிரதேசமாக்க அரசாங்கம் எண்ணியிருப்பதாகவும் தெரியவருகிறது.

# இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து விநியோகம்

யாழ்ப்பாணம், வியா
யாழ்ப்பாணம் மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினரால் இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பு மருந்துகள் பின்வரும் இடங்களில் விநியோகிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது:-

**12-11-1966**

நெடுங்குளம் பிரசவ விடுதி, பார்வதி வித்தியாசாலை அரியாலை, பரியோவான் கல்லூரி, கண்டிக்குழி, கந்தர்மடம் சைவப் பாடசாலை, பெரியபலம் பாடசாலை, வண்ணார்பண்ணை, கண்டிக்குழி மகளிர் பாடசாலை, தண்ணீர் தாங்கி, றெக்கிளமேசன், குருநகர் சனசமூக நிலையம், மாநகர சபை சுகாதார அலுவலகமும் யாழ்ப்பாண பொலீஸ் நிலையமும், பெருமாள் கோவிலடி, நாவாந்துறை றோ. க. பாடசாலை, நாவாந்துறை பிரசவ விடுதி.

**13-11-1966**

முஸ்லீம் வட்டார பிரசவ விடுதி, அபூபக்கர் பாடசாலை, கொய்யாத்தோட்டம் பிரசவவிடுதி, சிங்கள மகா மத்திய வித்தியாசாலை, திட்டி சனசமூக நிலையம், அந்தோனியார் சனசமூக நிலையம்பாசையூர், அரியாலை சனசமூக நிலையம், நவசிவாய வித்தியாசாலை கொட்டடி, அத்தியடி வாசிகசாலை, நீராவியடி சனசமூக நிலையம், மகேஸ்வரி வித்தியாசாலை நாயன்மார்கட்டு, கிராம சேவையாளர் கந்தோர் முருகமூர்த்தி கோவிலடி.

**14-11-1966**

வண்ணார்பண்ணைப்பிரசவ விடுதி, கதிஜா பெண்-பாடசாலை, அரியாலை பிரசவ விடுதி, விற்பனை இலாகா அலுவலகம் இராசாவின் தோட்டம் வீதி, கொழும்புத்துறை மத்திய மகாவித்தியாசாலை, நல்லூர் சாதனா பாடசாலை, இந்துபாடசாலை கஸ்தூரியார் வீதி, மங்கையற்கரசி வித்தியாசாலை நல்லூர், வேம்படி மகளிர் கல்லூரி, கொய்யாத்தோட்டம் வாசிகசாலை, மனோகரா படமாளிகை, மாநகரசபை ஆயுள்வேத வைத்தியசாலை இராஸ்வி வீதி, யாழ்ப்பாணம்.

**15 11 1966**

பரிசி சௌக்கிய நிலையம் மத்திய கல்லூரி, சோனகதெரு வெளிநோயாளர் பகுதி, தட்டாதெரு சனசமூக நிலையம், ரஹ்குமானியா வித்தியாசாலை, மூத்திரம் இராசையாவின் இல்லம், கிராமசேவையாளர் இல்லம் நாயன்மார் வீதி, கைலாயபிள்ளையார் கோவிலடி, கற்பக பிள்ளையார் கோவில் சனசமூ நிலையம், ... கோவிலடி ... பார்வதி மகாவித்தியாசாலை பெரியகடை.

## வழக்கறிஞர்சுகவீனம் விசாரணை ஒத்திவைப்பு

திருநெல்வேலி, வியா.
கீரிமலையில் வைத்து பஸ் உத்தியோகஸ்தர்கள் சிலரை மறித்து, அவர்களைத் தடைபண்ணியதாக கீரிமலையைச் சேர்ந்த விசாலாட்சி என்ற பெண் உட்பட ஐவர்மீது தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. நித்சிகால் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி இவ்வழக்கை விசாரணைக்காக எடுத்த போது எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதன் சுகயீனம் காரணமாக நீதிமன்றத்துக்கு வராமையினால் நீதிபதி வழக்கை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 27-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.


ராணே
உள் வில்லு
மெத்தைகள்
மிகவும் உயர்தரமானது!
உங்கள்
சௌகரியத்துக்கு ஏற்றது!
பலவிதமான வர்ணங்களில்



சோபா மெத்தைகள்



முழு விவரங்களுக்கும்
தயவுசெய்து எம்முடன்
தொடர்புகொள்ளுங்கள்.
த பர்மா ரீக்
ரேடிங் கம்பனிலிமிட்,
62, புளுமெண்டால் ரோட்,
கொழும்பு-13.
போன்: 2233,
2234



பவரின்
காய்கறிப் போரை



ஏ. பவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டி

## காலியுடன் யாழ்ப்பாணம் மோதும்

திருநெல்வேலி, வியா.

காலி மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டத் தெரிவுப் போட்டியில் முதலிடத்தைப்பெற்ற காலி மத்திய மகாவித்தியாலய முதலாம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டி இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ளது. இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இக்கோஷ்டியினர் இரண்டு உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குகொள்ளவிருக்கிறார்கள். இலங்கை வெள்ள நிவாரண நிதிக்காக யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகள் யாழ்ப்பாணம் விளையாட்டரங்கத்தில் நடைபெறவிருக்கின்றன.

இன்று மாலை 4-30 மணிக்கு யாழ்ப்பாணப் பாடசாலைகள் உதைபந்தாட்டப் போட்டியில் 'ஏ—1' குழுச் சம்பியனாகவும், 'ஏ' டிவிஷன் சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பளை யூனியன்கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் மோதுவார்கள். இதற்கு, யாழ்ப்பாணம் விஜயம்செய்யும் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயகா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நாளைய தினம் மாலை 4-30 மணிக்கு வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் 'ஏ-2' குழுச் சம்பியனாகத் தெரியப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியுடன் இவர்கள் மோதுவார்கள்.

விளையாட்டு வீரர்கள் விபரம்:- காலி மத்திய மகாவித்தியாலயம்: கே. சத்தியபாலா (கப்டன்), ஏ. பண்டித, டி. ஜே. சந்திரபால, கே. எம். சரத், டபிள்யூ. ஸ்டான்லி, ஏ. சேனநாயக்கா, டபிள்யூ. ஆரியதாச, எஸ். விக்கிரமரத்ன, டபிள்யூ. குமாரதாஸ, ரி. நூர், ஏ. ராமநாயகா, என். றயீம்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி: இ. சின்னத்தம்பி (கப்டன்), ஏ. இராஜேந்திரம், ஏ. செல்வராஜா, எஸ். இராசலிங்கம், கே. சத்தியானந்தன், கே. சரவணபவானந்தன், எஸ். தருமராசா, எஸ், சிவானந்தன், எஸ், கதிரமலை, டி. கே. கனகசபை, எம். வரராஜசிங்கம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி: எஸ். சண்முகலிங்கம் (கப்டன்). ரி. கந்தசாமி, சச்சரீஸ்வரன், இ. ரகுநாதன், ரி. தர்மகுலசிங்கம், கே. கணபதி, எஸ். லபீப், எஸ். பவலிங்கம். ரி. சுப்பிரமணியம், ரி. கெங்காதரன், எஸ். உதயலிங்கம்.

# ஆசிரியர்கள் போட்டியில் கதிரேசன் வெற்றி

நாவலப்பிட்டி, புதன்

நாவலப்பிட்டி வட்டாரப் பாடசாலைகள் ஆசிரியர்களுக்கிடையே நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் எட்டுக்கதிகமான பாடசாலைகள் பங்குபற்றின. இறுதிப் போட்டியில் கதிரேசன் குமாரமகா வித்தியாலயமும் சென், மேரிஸ் குமாரமகாவித்தியாலயமும் கலந்துகொண்டன.

இப்போட்டியில் கதிரேசன் குமாரமகா வித்தியாலயமவெற்றிபெற்று கேடயத்தைச் சுவீகரித்தது. வெற்றிபெற்ற கோஷ்டியில் ஆதம ஜோதி நா. முத்தையாவும், திரு. சம்பந்தரும் திறமையாக விளையாடினர். திரு. சிவசுப்பிரமணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## உரும்பராய் இந்து வெற்றி

புன்னாலைக்கட்டுவன், புதன்

உரும்பராய் இந்துக்கல்லூரி 3-ம் பிரிவுக்கோஷ்டிக்கும் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் உரும்பராய் கோஷ்டி 4—1 கோல்களால் வெற்றிபெற்றது. திரு. வைகனேஸ்வரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# தெல்லிப்பளை யூனியன் யாழ். சாம்பியனானது

## ரசிகர்கள் கண்டுகளித்த சிறப்பான விளையாட்டு

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம், முதல் பிரிவில் 'ஏ' டிவிஷனின் சாம்பியன் போட்டி பிரிவுச் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் யாழ். இந்துக்கல்லூரிக்குமிடையே நடைபெற்றது.

இப் போட்டியில் ஆரம்பத்திலிருந்து முடிவுவரையும் பெரும்மோதலில் ஈடுபட்ட யூனியன்கல்லூரி அமோக வெற்றியீட்டி யாழ்ப்பாணச் சாம்பியனானது. ஆரம்பத்திலிருந்துமுடிவுவரையும்ரசிப்பாகக்காணப்பட்ட இப் போட்டி, நூற்றுக்கணக்கான ரசிகர்களின் ஆரவாரத்துக்கிடையேயும், மழைத் தூறலுக்கிடையேயும் மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமானது. ஆரம்பமாகி பதினைந்து நிமிடங்களுக்குப்பின்னர் யாழ். இந்துவே முதலாவது கோலை வினாகியது. இக்கோலை இக்கோஷ்டியின் காப்டன் சண்முகலிங்கம் போட்டார். இதன் எதிரொலியாக யூனியன் கோஷ்டியின் இடது முன்னணி வீரர் தர்மராசா மின்னல் வேகத்தில் பந்துகொண்டு சென்று 2 கோலை சூட்டோடு சூடாக வெளுத்தவாங்கினர். ரசிகர்களின் அப்பிளாஸ்கள் எங்கும் எதிரொலித்தன. யாழ். இந்து ஒருகோலும் யூனியன் இரு கோல்களும் பெற்றிருந்த நிலையில் இடைவேளைவிடப்பட்டது.

இடைவேளைக்குப் பின்னர் இருகோஷ்டிகளும் பெரும் பலப்பரீட்சையில் ஈடுபட்டன. எனினும் நேரம்போகப்போக யாழ். இந்துவின் நிலைதளர்த்தப்பட்டது யூனியன் மேலும்முன்னேறி அலை அலையாகவந்து எதிர்க் கோஷ்டியுடன் மோதியது. ஒருகட்டத்தில் யூனிறன் கோஷ்டியின் இடது கரை வீரர் ஆர். சரவணபவான் மின்னல்வேகத்தில் தன்னந்தனியே பந்துகொண்டு சென்று அதிர் அடி ஒன்று போட்டார், பந்தும்கோலுக்குள் வாய்ந்தது. சூட்டோடு சூடாக கோல் அடிப்பதில் புலியாகக்காணப்பட்டதர்மராசா மேலும் ஒருகோலைப் போட்டார்.

யாழ். இந்துவின் பின்னணி வீரர்களின் தவறுதல்களே அவர்களின் தோல்விக்குக் காரணமாக இருந்தது. எனினும் ஆரம்பத்தில்அவர்களே யூனியனைத்திணற வைத்தது பாராட்டுக்குரியது. காப்டன் சண்முகலிங்கத்தின் ஆட்டம் சிறப்பாகவிருந்தது. இப்போட்டி முடிவில் யூனியன் 4-1 கோல்களால் யாழ். இந்துவைத் தோற்கடித்தது. யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இச் சாம்பின் போட்டிக்கு திரு மாட்டீன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்

நாவலப்பிட்டி, புதன்

சலவை, சிகை அலங்கரிப்பு தொழிலாளர் யூனியனின் கோரிக்கைகள், மாத்தளை தொழில் கமிஷனர் முன் விவாதத்திற் கெடுத்துக் கொள்ளப்பட்ட போது சலவை, சிகை அலங்கரிப்பு தொழிலாளர்களுக்குத் தோட்டங்களில் பற்றுச்சீட்டு. பெயர்பதிவு, அவர்களது குழந்தைகளுக்கு தோட்டக்கணக்கில் ரேஷன் அரிசி. சகாயநிதி, குடும்பத்தாருக்கு தோட்டங்களில் வேலைவாய்ப்பு ஆகியவை பற்றிய புள்ளி விபரங்களை தொழில் இலாகா மேலிடத்திற்கு சமர்ப்பிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது,

திருவாளர்கள் ஜி. எல். மோத்தா. ஆர். பெருமாள் எம். அழகு, ஏ. நாகன், வி. வெங்கடாசலம், ஆர். எம். மருதமுத்து, பி. ஈ. பாபு எம். தங்கராசு ஆகியோர் யூனியன்சார்பில் சமுகமளித்திருந்தனர்.

## "சுகத்துடன் வந்துசேர்'

மாவிட்டபுரம், திங.

"உன்னைப் பெற்ற தாய் உன்னைத்தொடர்ந்தும் வீட்டில் வைத்திருக்கப் பயப்படுகிறார் நான் உன்னைச்சிறைக்கு அனுப்புகிறேன். அங்கு உனக்கு வேண்டிய சிகிச்சைகள் அளிக்கப்படும். சுகதேகியாக வந்து உனது தாயுடன் சந்தோஷமாக இரு" இவ்வாறு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நித்தியா முன்னிலையில் தாய்க்கு மகன் அடித்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கில் சங்கானைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த சேனாதிராஜா நாகராசா என்பவர் தனது தாய்க்கு அடித்துக் காயம் விளைவித்ததாகசங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு தீர்ப்பு வழங்குவதற்காக மல்லாகம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது நன்னடத்தைப்பாதுகாப்பு அதிகாரி நீதிபதியிடம் எதிரி மனநோய் உடையவராகக் காணப்படுகிறார் என்று கூறினர். இதனைத் தொடர்ந்து நீதிபதி எதிரியை ஆறுமாதச்சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் சிறையில் அவருடைய நோய்க்குரிய சிகிச்சை அளிக்கும்படியும் உத்தரவிட்டார்.

## பொதுமக்கள் கஷ்டம்

சங்கானை, புதன்

சங்கானையிலுள்ள அரசினர் மரக்காலையில் கடந்த சில நாட்களாக விற்பனைக்கு விறகுஇல்லை இதனால் தூர இடங்களில் இருந்துவரும் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் வேறு இடங்களுக்கு விறகு வாங்குவதற்குசெல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.





இந்த நேர்மையான புதிய பி பி பி 66 திறமையைத் தேடும் மக்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. தானே மை நிரப்பும் அதன்விசேஷ கருவியை நீங்கள் விரும்புவீர்கள்!.......... அதன் சுலபமாக எழுதும் தன்மையால், மணித்தியாலக்கணக்கில் எழுதினாலும் மணித்தியாலங்கள் நிமிடங்களாய் மாறிவிடும்!..........பேனாவிலிருந்து மை ஒழுகாமலிருப்பது உங்களின் விருப்பத்திற்குரியதாகும்..........அதன் நெடுத்த பார்வைக்கழகான தோற்றம் உங்கள் கண்களைக் கவரும்!..........உங்கள் கையெழுத்து திருந்தும்!........உண்மையாக பி பி பி 66 பேனாவின் சகல வாய்மைகளையும் நீங்கள் விரும்புவீர்கள்!

**பி.பி.பி. 66**

ஜப்பான் பிளட்டினம் கம்பெனியின் ஒரு தயாரிப்பு

பி பி பி 66
பேனாவானது ஆண் பெண் யாவர்க்கும் உகந்தது.



சகலபொருட்கடைகளிலும் கிடைக்கும் பி. பி. பி. 66 பேனாவை இன்றே கேட்டுப் பாருங்கள்
ஏக விற்பனையாளர்:
ஹேஜேந்திரம்ஸ் லிமிட்டெட், மகாராஜா பில்டிங். பாங்ஷால் வீதி, கொழும்பு-11,
டெலிபோன்: 3603


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசபாநாயகர்மீது

# நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி

கொழும்பு, வியாழன். உபசபாநாயகர் திரு. ஷெரிலி கொரியாமீது எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணை இன்று பிரதிநிதிகள் சபையில் தோல்வியுற்றது. பிரேரணைக்கு சாதகமாக 75 வாக்குகளும் பாதகமாக 52 வாக்குகளும் கிடைத்தன.

பிரேரணையின் மீது திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, ஜே. ஆர். ஜயவர்தன ஆகியவர்கள் பேசினார்கள். எதிர்க்கட்சியினர், தொடம்பே முதலாளிபற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். அவரைப்பற்றிக் கேள்விகளும் கேட்கிறார்கள். ஞானசீகதேரோவிடம் கேட்டால் தொடம்பே முதலாளி ஒரு குண்டர் என்றும் கைக்குண்டு வீசுபவர் என்றும் உங்களுக்குச் சொல்லுவரர் என்று ராஜாங்கமந்திரி திரு. ஜயவர்தன கூறினார்.

இந்தக்கட்டத்தில் திரு. பீட்டர் கெனமன் எழுந்து ஞானசீகதேரோ பற்றி பேசுகிறீர்கள் இது சபை ஒழுங்கு முறைக்கு முரணாகும் என்றார்.

இப்படி சொல்வீர் என்று எனக்குத் தெரியும் என்று திரு. ஜயவர்தன கூறினார். அவர் மேலும் பேசுகையில் இரிதரமில் பற்றிய பிரச்சனையை நாங்கள் முன்னர் எதிர்க்கட்சியில் இருக்கும் போது கிளப்பினோம் அப்போது ஆட்சியிலிருந்தவரான திரு. பீலிக்ஸ்டயஸ் தான் தமது சகாவான ஒரு அங்கத்தவரின் பைலை எங்களிடம் கொடுத்தார் என்றார்.

# நீதிமன்றத்தை அவமதித்ததாக சிறிமாவோமீது வழக்கு

## அட்டேர்ணி ஜெனரல் முடிக்குரியதரப்பில் ஆஜராவார்

கொழும்பு, புதன். திருமதி பண்டாரநாயகா கடந்த தேர்தலின் போது பண்டாரவளையில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவு நீதிமன்றத்தை அவமதிப்பதாகவிருக்கின்றது. என்றும் அவர்கோர்ட்டை அவமதித்தார் என்று உத்தரவிடும்படியும் ஒருமனுவை திரு. ஆர். ஏ. ஜயரத்ன தாக்கல் செய்துள்ளார்.

இந்தமனுமீதான விசாரணை. நீதிபதிகள் ஸ்ரீஸ்கந்தராஜா, சிவசுப்பிரமணியம் ஆகியவர்கள் முன்னிலையில் விசாரணைக்குவந்தது.

அரசாங்கம், தம்மீது தேர்தல் வழக்குத்தொடர்ந்ததின் மூலமும், தமதுதம்பிகளில் ஒருவர்மீதுலஞ்சவழக்கும், இன்னொருவர்மீது தேர்தல் ஆட்சேபவழக்கும் தொடர்ந்ததின் மூலம் தமக்கு இடைஞ்சல் உண்டாக்குகின்றது, என்றகருத்துப் பட திருமதி. பண்டாரநாயகா பேசியதாக ஒருசெய்தி வெளியாகியிருந்தது. இதன்மீதே இப்போது இந்தவழக்கு தொடரப்பட்டுள்ளது.

அச்செய்தியை வெளியிட்ட டைம்ஸ்ஒப் சிலோன் பத்திரிகையின் ஆசிரியர் மீது அதேஉத்தரவைபிறப்பிக்கும்படி மனுதார் கேட்டிருக்கிறார். பிரதிவாதிதரப்பில் ஆஜரான திரு. கே. சி. நடராஜா தமது கட்சிக்காரரின் நிலையைவிளக்கினார்.

நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா பதிலளிக்கையில் இந்தமனுவிசாரணை தாம் பிரசன்னல் இல்லாத ஒரு நீதிபதிகள் குழுவின் முன்னிலையில் எடுக்கப்படும் என்றும் அட்டோணி ஜெனரல் அரசாங்கதரப்பு 'நண்பர்' என்ற முறையில் ஆஜராவார் என்றும் கூறினார்.

# மீஸோ முன்னணியினர் கி. பாகிஸ்தானில் பயிற்சி

புதுடில்லி, நவ. 9

மீஸோ தேசிய முன்னணியின் உறுப்பினர்கள் கிழக்குப்பாகிஸ்தானில் பயிற்சி பெற்று வருவதாக இந்திய லோகசபையில் இன்றுஉத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

இதைபற்றி கிழக்குப்பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு ஆட்சேபம்தெரிவிக்கப்பட்டுள்ளதென்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது.

கைத்தறி ஜவுளிகள்

100-ம் நெர், 120 நெர் 6 யார், 7 யார் டிசைன் சேலைகள், பரமாஸ் வேட்டி செற், சருகை வேட்டி செற், குறி வேட்டி, சால்வைகள் பெட்சிற் துவாய், மற்றும் பலவித தினுசுகளும் எங்களிடம் மலிவாகப் பெறலாம்.

S. R. S.

ஜவுளிமாளிகை

216, K. K. S. வீதி யாழ்ப்பாணம்.

போன்: 296

## கார்-பஸ மோதல்

மாவிட்டபுரம், செவ்.

இன்று காலை சுன்னாகத்திலிருந்து கீரிமலைக்குச் சென்ற ஓர் இரட்டைத்தட்டு பஸ்ஸும் சுன்னாகத்தை நோக்கி காங்கேசன்துறை றோட்வழியாக வந்த ஒருசோமசெட் காரும் சுன்னாகம் பெற்றோல் செட்டிற்கு அருகில் மோதிக்கொண்டன. சுன்னாகம் பொலிசார் புலன் விசாரணை நடத்துகிறனர்.

## கண்டனக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

சாதி பாகுபாடு காட்டுவதற்கெதிரான மக்களின் போராட்டத்தை ஆதரித்தும், தீண்டாமைக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சி நடாத்திய ஊர்வலத்தை பொலிஸ் தாக்கியதை கண்டித்தும், மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்துக்கருகாமையில் இன்று பிற்பகல் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும்.

## கள் இறக்கும் தொழிலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கத்தின் பொது நிர்வாகசபைக் கூட்டம் சங்கக் காரியாலயத்தில் சங்கத்தின் தலைவர் திரு. கே. ஐ. பூலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது தலைவர் தமது உரையில், சங்கம் பல ஆண்டுகளாகத் தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்கு உழைத்துவருவதாகவும் சங்கம் மேலும் தொடர்ந்து உழைத்துவருமென்றும் கூறினார்.

பொதுக்காரியதரிசி திரு எம். சி. சுப்பிரமணியம் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று உள்நாட்டமைச்சர் டாக்டர் தகநாயகா வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் பேட்டிதரச் சம்மதம் தெரிவித்ததற்கு நன்றி கூறி அமைச்சரிடம் சங்கத்தின் அங்கத்தவர்களின் கஷ்டங்களை எடுத்துக்கூறி ஆவன செய்ய முயற்சி எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

திருவாளர்கள் கே. தவசிப்பிள்ளை ஜே.பி.; மு ஆறுமுகம் ஜே. பீ. ஆ. செல்லையா, சி. சிற்றம்பலம் ஆகியோரும் பேசினர்.

## தேயிலை விற்பனை

கொழும்பு, புதன்

இம்மாதம் 14,-15 ம்திகதிகளில் நடைபெறவிருந்த இவ்வார தேயிலை விற்பனை இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் வேலை நிறுத்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## விபத்து

உடுவில், புதன்

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் நேற்றுப் பகல் ஒரு காரும் டபிள்டெக்கர் பஸ்ஸும் மோதிக் கொண்டன. சுன்னாகம் சந்திக்கு அருகாமையில் ஏற்பட்ட இவ் விபத்தில் கார் பலத்தசேதத்துக்குள்ளானது. சுன்னாகம் பொலிசார் ஸ்தலத்திற்குச்சென்று விசாரணைநடத்தினர்.

## "அரசாங்கத்துக்கு நன்றி"

பக்கலை, புதன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பியதற்கு தேசிய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை உறுவல பெறுவகிராம சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## சோவியத்தேசிய தினவிழா

உடுவில், வியா

இலங்கை - சோவியத்நட்புறவுச்சங்க ஆதரவில் சோவியத்தேசியதினவிழாஇன்றுமாலை குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்க திறந்த வெளியரங்கில் நடைபெறும் இவ்விழாவிற்கு உடுவில் பாராளுமன்ற அங்கத்தவர் திரு.வி. தருமலிங்கம் தலைமைவகிக்கிறார்.

## மந்திரி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுன்னாகத்தில், திருவள்ளுவர் மகாசபையினர் மந்திரியை சந்திப்பர்.

நண்பகல் 12-30 மணிக்கு தையிட்டி நெசவு நிலையத்திற்கு மந்திரி விஜயம் செய்வார்.

மாலை 3-30 மணிக்கு இராசமாணிக்கையில் மக்கள் முன்னேற்றமன்றம், பீடிகளும் [illegible] மந்திரியை வேண்டுகோளும்:

மாவட்டசபை மசோதா

# உள்ளூராட்சி மன்றங்கள் பல எதிர்க்கின்றன

கொழும்பு, செவ். உத்தேச மாவட்டசபை மசோதா ஜனப்பிரதிநிதிகள்சபையில் கொண்டுவரப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பல உள்ளூராட்சி மன்றங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன.

இதே நேரத்தில் இம் மசோதா விரைவில் கொண்டுவரப்படவேண்டும் எனத் தமிழரசுக்கட்சியினர் கோரிக்கை விடுத்திருப்பதுடன், இதுசம்பந்தமாக விரைவில் பிரதமரைக் கட்சியின் தூதுக்குழு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுமிருப்பதாக அறியப்படுகின்றது.

இம்மசோதா கொண்டு வரப்படுவதை ஆட்சேபித்து பிரதமருக்கு பல உள்ளூராட்சி மன்றங்கள் மகஜர்களை அனுப்பிவைத்துள்ளன.

வேருவலை கிராமசபை கிகாகொடை கிராமசபை உடுகஹா கிராமசபை நிக்கவரட்டிய கிராமசபை ஆகிய கிராமசபைகள் சமீபத்தில் இம்மசோதா கொண்டுவரப்படுவதை ஆட்சேபித்து தீர்மானங்கள் நிறைவேற்றின.

சீமெந்து தொழிற்சாலையில்

# பாதுகாப்பு இல்லாவிடில் பல உயிர்கள் பலியாகலாம்

## மரணவிசாரணை அதிகாரி கருத்து

திருநெல்வேலி, வியா

''புதிய சூளை இயங்கத் தொடங்கி 6 மாதகாலத்துக்குள்ளேயே ஓர் உயிரைப் பலிவாங்கிவிட்டது. இங்கு சரியான பாதுகாப்பு ஏற்படுத்தப்படாவிட்டால் இன்னும் எத்தனை உயிர்களைப் பலிவாங்கும் என்பதைச் சொல்லமுடியாது ஆகவே இதற்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்படுத்த நிபுணர்கள், சீமெந்துத் தொழிற்சாலை அதிகாரிகளுடன் ஆலோசனை செய்யவேண்டும்.''

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஊழியரான தவசி தர்மலிங்கம் (35 வயது) தொழிற்சாலைச் சூளையில் வேலைசெய்து கொண்டிருக்கையில் மரணமடைந்தது சம்பந்தமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடைபெற்ற மரண விசாரணையின்போது திடீர் மரணவிசாரணை அதிகாரியான திரு. எஸ். கனகரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலஞ்சென்ற தொழிலாளியைக் காயங்களுடன் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றபோது நெருப்பினால் ஏற்பட்ட காயங்களுக்கு முதலில் பூசவேண்டிய 'பர்ணல், என்ற களிம்பு அங்கு இல்லாமல் இருந்திருக்கின்றது அந்தநேர தேவையைப் பூர்த்திசெய்வதற்காகவும்' தனது தொழிற்சாலைத் தொழிலாளியின் தேவையை நோக்கியும், அதன் உப அதிபர் தமது தொழிற்சாலை இருப்பிலிருந்து 6 புட்டி பர்ணல் கொடுத்து உதவியளித்தார்.

ஆனால் வேறொரு தனிநபருக்கு இவ்விதம் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தால் அவருக்கு உடனே சிகிச்சையளிப்பதற்கு இம்மருந்து இல்லாமலேயிருந்திருக்கும். அரசாங்கத்தைநம்பிவாழும் பொது மக்களுக்கு தேவையான அவசிய மருந்துகளை யாவது ஆஸ்பத்திரிகளில் இருப்பில் இருக்கக் கூடிய வகையில் சுகாதாரஅமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று அவர் கூறினார்.

காலஞ்சென்றவரின் மனைவியான இராசமணி சகஊழியரான சிவராசா, சித்துவலிங்கம், டாக்டர் ஏ. ஜீவரத்தினம் ஆகியோர் சாட்சியமளித்தபின்னர் விபத்தினால் மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## மன்னாரைநோக்கி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. அருணாசலம் தலைமைக் காரியாலயத்துக் காரியாதிகாரிக்குத் தந்தி மூலம் அறிவித்துள்ளார். தொடர்ந்து பெய்யும் கடும்மழையின் காரணமாகப் புளியங்குளம் வழிந்து யாழ்ப்பாணம்-கண்டி வீதியில் 2 அடி உயரத்துக்கு மேலாகப் பாய்வதால் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, அநுராதபுரம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பஸ் சேவைகளும் நேற்று மாலை தொடக்கம் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இனி நொச்சிப் பகுதியிலும் பல குளங்கள் நிரம்பி வழிவதாகவும், மழை தொடர்ந்து பெய்யுமானால் நிலைமை மோசமாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணைப்பகுதியில் கடும் காற்றினால் பல மரங்கள் சரிந்து வீழ்ந்ததோடு பல பயிர்ச்சேதங்களும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இப்பகுதி மீனவர்கள் இன்று மீன்பிடிக்கச் செல்லவில்லை.

வானிலை அவதான நிலையத்தினரின் புயல் அறிவிப்பைத் தொடர்ந்து கரையூர், பாஷையூர், குருநகர் நாவாந்துறையைச் சேர்ந்த மீனவர்கள் எவரும் கடந்த இரவு மீன்பிடிக்கச் செல்லவில்லை.

திருநெல்வேலியில் பிரதான வீதியிலும் கடும்காற்றினால் மரமொன்று வேருடன் சரிந்து வீழ்ந்ததால் திருநெல்வேலி-கல்வியங்காடு போக்குவரத்துச் சேவை துண்டிக்கப்பட்டுள்ளது.

நல்லூரில் மரமொன்று சரிந்து வீழ்ந்ததால் அதில் அகப்பட்ட வாய் பேசமுடியாத ஒருவர் கடுங்காயங்களுடன் நேற்றிரவு யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அமெரிக்க தேர்தல்கள்

வாஷிங்டன், நவ. 9

அமெரிக்காவில் நடைபெற்ற இடைக்காலப் பொதுத்தேர்தல்களில் செனட்சபையில் ஆளும் ஜனநாயகக் கட்சி மேலும் நான்கு ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது.

இதுவரை கிடைக்கப் பெற்ற முடிவுகளின்படி பாராளுமன்றத்திலும் குடியரசுக் கட்சிக்கு அதிக ஸ்தானங்கள் கிடைத்துள்ளன.

## பயங்கர மோதல்

புதுக் குடியிருப்பில் ஒரு லொறியும், காரும் பயங்கரமாக மோதிக் கொண்டதனால் கார்ச் சாரதியான நாகமணி ஸ்தலத்திலேயே மரணமானார். காரில் சென்ற மற்றையோர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். லொறிச் சாரதி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்டுக்காக அவர்களால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேல்வீதி, 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org